விலை ரூபா 2-00 12 பக்கங்கள்

# ஈழநாடு

வார மலர் EELANADU VARAMALAR

மலர் 28 ஆனி 15 ஷவ்வா 20 இதழ் 138

யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை (29—6—86)

தம்பலகாமம் காட்டுக்குள் —

## பெண்கள் உட்பட 34 பேரின் சடலங்கள் மீட்பு

யாழ்ப்பாணம், ஞாயிறு.

திருமலை மாவட்டத்தைச் சேர்ந்த தம்பலகாமம் பகுதியில் உள்ள காட்டுக்குள்ளிருந்து பெண்களுட்பட 34 பேரின் சடலங்கள் நேற்று கிடக்கக்கண்டு பிடிக்கப் பட்டுள்ளன.

தம்பலகாமத்திலுள்ள அரிசிமில் ஒன்றின் உரிமையாளரின் மனைவியினதும், அந்த மில்லில் வேலை செய்தவர்களினதும் சடலங்கள் என இவை அடையாளம் காணப்பட்டுள்ளது.

கடந்த இரு நாட்களுக்கு முன்னர் அரிசிமில்லுக்குள் புகுந்த ஆயுதம் தாங்கிய ஊர்காவல்படையினர் துப்பாக்கிமுனையில் பயமுறுத்தி 34 பேரையும் காட்டுக்குள் கடத்திச் சென்று சித்திரவதை செய்தபின் படு

(11 ம் பக்கம் பார்க்க)

கிளிநொச்சியில் இராணுவத்தினரால்

# உழவுஇயந்திரத்தில்வந்த ஆறு விவசாயிகள் எரிக்கப்பட்டனர்

(அலுவலக நிருபர்)

**கிளிநொச்சி இராணுவமுகாமிலிருந்து நேற்றுக்காலை வெளிவந்த இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் பலத்த மோதல் இடம் பெற்றசமயம், அவ்வழியால் உழவு இயந்திரம் ஒன்றில் வந்த விவசாயிகள் ஆறுபேர் இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்டு பின்னர் உழவு இயந்திரத்துடன் சேர்த்து எரிக்கப்பட்டனர்.**

கிளிநொச்சிஇராணுவ முகாமிலிருந்து நேற்றுக்காலை நடைபவனியாகவும் வாகனங்களிலும்வெளியே வரமுயன்ற இராணுவத்தினரை நோக்கி 'தமிழீழ விடுதலைப் புலிகள்' இயக்கப்போராளிகள் பலத்த தாக்குதல் மேற்கொண்டனர். இத்தாக்குதலின்போது ஒரு கவசவாகனம் சேதமடைந்ததுடன் இராணுவத்தினர் தரப்பில் பலத்தசேதமேற்பட்டது.

அச்சமயம் அவ்வழியாக உழவுயந்திரத்தில் வந்து கொண்டிருந்த 6 விவசாயிகள் இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர் கொல்லப்பட்ட 6 விவசாயிகளும் பின்னர் உழவுயந்திரத்துடன் சேர்த்துத் தீவைத்து எரிக்கப்பட்டனர்.

மேலும் இராணுவத்தினரின்

(11ம் பக்கம் பார்க்க)

## படைகள்-புலிகள் தொடர்ந்து மோதல்

மட்டக்களப்பு, சனி

மட்டக்களப்பு மாவட்டத்தில் கிரான் கிராமத்திலுள்ள விடுதலைப்புலிகள் முகாமை முற்றுகையிட்ட கொமாண்டோப்பொலிசாரை விடுதலைப்புலிகள் இயக்கப்போரா

(11ம் பக்கம் பார்க்க)

நாவற்குழியல —

## ஹெலி, ஷெல் தாக்குதல் ஒருவர் பலி,மூவர் காயம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

நாவற்குழி இராணுவ முகாமிலிருந்து நேற்று ஏவப்பட்ட 'ஷெல்'லுக்கு ஒருவர் பலியானர் அதேவேளை ஹெலிகொப்டர் சுட்டதனுல் ஒருபெண் உட்பட மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்று நண்பகல் 12மணியளவில் நாவற்குழி இராணுவ முகாமிலிருந்து இராணுவத்தினர் வயல்வெளியில் படுத்து ஊர்ந்தவண்ணம் கைதடியை நோக்கிச் செல்லமுயன்றபோது போராளிகள் துப்பாக்கிப் பிரயோகத்தில் ஈடுபட்டனர் இதைத்தொடர்ந்து முகாமுக்குத் திரும்பிய இராணுவத்தினர் 'ஷெல்' தாக்குதல்நடத்

(11ம் பக்கம் பார்க்க)

கிளிநொச்சியில் —

## இயங்காத பாடசாலைகளுக்கு விடுதலையளிக்க முடிவு

[கே.வி.கே.திருலோகமூர்த்தி]

கிளிநொச்சிப் பகுதியில் இயங்க முடியாத நிலையில் மூடப்பட்டுள்ள சுமார் பத்துப் பாடசாலைகளுக்கு தொடர்ந்து விடுதலையளிப்பதென பளையில் நடைபெற்ற கிளிநொச்சிப் பகுதி பாடசாலை அதிபர்களின் கூட்டத்தில் முடிவுசெய்யப் பட்டுள்ளது.

பளை மகாவித்தியாலயத்தில் உள்ள கிளிநொச்சி மாவட்ட கல்விப் பணிப்பாளர்பணிமனை அலுவலகத்தில் கல்விப் பணிப்பாளர் ஜனுப் எம். எம். மன்சூர் தலைமையில் இக் கூட்டம் நடைபெற்றது.

கிளிநொச்சி நகரத்திலும் அண்மித்துள்ள பகுதிகளிலும் உள்ள பாடசாலைகள் கிளிநொச்சி நிலைமைகளைத் தொடர்ந்து கடந்த 4ம்திகதிக்குப் பின்னர் மூடப்பட்டுள்ளன. இதனுல் சுமார்15 ஆயிரம் மாணவர்களின் கல்வி முற்ருகப் பாதிக்கப்பட்டுள்ளது.

இப் பதினையாயிரம் மாணவர்களும் நகரப் பகுதியில் உள்ள முக்கிய பாடசாலைகளில் கல்வி பயின்று வருகின்றனர். கிளிநொச்சி இராணுவ முகாமிற்கு சமீபத்தில்தான் மத்திய கல்லூரி,மகளிர் கல்லூரி, வடபகுதியில் அதிக கனிஷ்ட மாணவர் தொகையைக் கொண்ட கனிஷ்ட மகா வித்தியாலயம் ஆகியனவும் உள்ளது குறிப்பிடத்தக்கது.

(12ம் பக்கம் பார்க்க)



இராணுவத்தினரால் கொலையுண்ட அருட்சகோதரர் வண. இமானுவேல் வென்செஸ்லாஸ் அடிகளாருக்கு அனுதாபம் தெரிவிக்கும்முகமாக பருத்தித்துறை புனித அந்தோனியார் ஆலயத்திலிருந்து ஆரம்பமான சிலுவை சுமக்கும் நீண்டதூர அமைதிப் பிரார்த்தனை ஊர்வலத்திற்கு பருத்தித்துறை பங்குத்தந்தை அருட் திரு. பொனிபொஸ் அடிகளார், பருத்தித்துறை பிரஜைகள்குழுத் தலைவர் பேராசிரியர் வீ. கே. கணேசலிங்கம் ஆகியோர் தலைமைதாங்கிச் செல்வதையும், முன்னாள் பருத்தித்துறை நகரசபை உறுப்பினர் திரு. வின்செற்ன் டீ போல் சிலுவையைச் சுமந்து செல்வதையும், ஊர்வலத்தின் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

(படம்: புலோலி நிருபர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரி விளம்பரம்

## விற்பனைக்கு

பம்பாய் வெங்காய விதை விற்பனைக்குண்டு. கிலோ ரூபா 250/. பிள்ளையார் மெற்றல் வேக்ஸ், 257, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். (C 3004)

A/L மாணவர்களுக்கான "கணக்கியல் கோட்பாடுகள்" (Accounting Theory) வெளிவந்துவிட்டது. சகல புத்தகக் கடைகளிலும் கிடைக்கும். [C 2988]

Auto Zooming Auto Forgus Title ஆகிய தன்னியக்க வசதிகள் உடைய மிக அண்மையில் அறிமுகமான J. V. C. Video Camera (Model No GX N 70E) உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: "ரெலிகோணர்", சாவகச்சேரி". C 3037)

தளபாடங்கள், வீட்டுப்பாவனைப்பொருட்கள், Harmoneyam, [ஆர்மோனியம்], குளிர்சாதனப் பெட்டி, ஹோல் செற்றி, அல்மாரி Showcase, Formica சாப்பாட்டுமேசை, கதிரைகள். Tea trolly, Akai Stereo Set, Water Filter, சில்வர் கிளாஸ்வகைகள் Curtain, படுக்கைவிரிப்புகள், Bleader, Brass Stature மற்றும்பல உடன்விற்பனைக்கு 326, Main Street, மாவடிச் சந்தி Patrics ரோட் அருகில். [C3104]

நல்ல நிலையிலுள்ள 86 ஸ்ரீ 8265 Honda M-B 8 விற்பனைக்குண்டு, தொடர்பு: ரூபன், 131/4, பருத்தித்துறைவீதி, நல்லூர் நூல்நிலைய அருகாமையில் உள்ள ஒழுங்கை. [C3136]

இரட்டைக்கதவு குளிர்சாதனப்பெட்டி British தயாரிப்பு உடன் விற்பனைக்குண்டு. 3, Patricks Road, Jaffna. [C3105]

100 இரும்புக்கதிரை: அரிவு மெசின் மேசைப்பட்டறை [English make], வெஸ்பா ஸ்கூட்டர், A/55 கார் தொடர்பு கொளளவும்: மு சிவலிங்கம், 303, பலாலிவீதி, பரமேஸ்வராசந்தி, திருநெல்வேலி. [C3129]

அல்சேஷன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. Pure Bred wormed and weaned. நன்கு கிழமைகள். பழைய நம்பர் 181, கோவில் வீதி, நல்லூர். C 3126

235, நாவலர்வீதி, பெருமாள் கோவிலுக்கு அருகாமையில் 3/4ப் பரப்பு காணி விற்பனைக்குள்ளது. தொடர்புகொள்ளும் முகவரி, திருமதி தனபாலசிங்கம், 235, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [C 3149]

வில்லூன்றிப் பிள்ளையார் கோவில் அருகில் ஒழுங்கையில் சிறிய வீட்டுடன், எல்லை மூன்று பக்கமும் உயரமான மதில், கிணற்றுப் பங்கு, மலசலகூடம் அடங்கிய முக்கால் பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. ஒரு பக்கம் முஸ்லீம் கல்லூரி வீதி, மற்றப்பக்கம் பீச் ரோட், ஒழுங்கை பதினெட்டு அடி அகலமும், முழுதும் முஸ்லீம் மக்கள் சீவிப்பதால், முஸ்லீம் மக்களுக்கே உகந்தது. தொடர்பு: சு. பஞ்சாட்சரம், 207, பலாலி வீதி, கோண்டாவில். தொலைபேசி: 23897. C 3140

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள Sony சுசற் ரேடியோ விற்பனைக்குண்டு. (செப்பிறேட் Speker Box). தொடர்பு: தீசன், 131/2 பருத்தித்துறை வீதி, நல்லூர் நூல்நிலையத்துக்கு பக்கத்து ஒழுங்கை. C 3137

பற்றிக் (Batick) துணிவகைகள் ஓடருக்கு செய்துகொடுக்கப்படும். விரும்பிய டிசைன்களில் பற்றிக் Batick) ஆடைகள் பெற்றுக்கொள்வதற்கு வசந்தா ரெக்ஸ்ரையில்ஸ் (Vasantha Textiles), 42, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம். C 3130

## தேவை

C. G. 125 Honda G T O Kawasaki S L 70 Honda-நல்ல நிலையிலுள்ள மோட்டார் சைக்கிள் ஒன்று தேவை தொடர்பு: மல்ரி ஒயில், K. K. S. Road, இணுவில். C-3148]

இரண்டு வருட அனுபவமுள்ள தமிழ் 'ரைப்பிஸ்ட்' உடன் தேவை. ஆங்கில, தமிழ் ரைப்பிங் வேலைகளில் ஆற்றலும் தகுதியும் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் விண்ணப்பங்கள் 05-07-1986 ந் திகதிக்குமுன் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பவும்: கிளீன் கட், 239, மின்சாரநிலையவீதி, யாழ்ப்பாணம். [C-3138]

தனிநபர் பாவனையிலுள்ள C-90, C-70, C-50 ஒன்று தேவை. கீழ்க்காணும் விலாசத்தில் தொடர்பு கொள்ளவும்: 35/2, கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குளி [C3121]

யாழ்ப்பாணத்தில் புதிதாக ஆரம்பிக்கவிருக்கும் தரமுள்ள குளிர்பான தயாரிப்பு ஸ்தாபனத்திற்கு அனுபவமுள்ள வேலையாட்கள் தேவை. முழு விபரங்களுடன் விண்ணப்பிக்கவும்: விளம்பர இல: C 3150, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். [C 3150]

நீங்கள் பாவித்த இசைக் கருவிகளை (பியானோ, வயலின், கிட்டார், வீணை முதலியன) நல்ல விலைக்கு விற்க விரும்புகிறீர்களா? உடன் உங்கள் இசைக்கருவிகளின் விபரங்களுடன் விற்கவேண்டிய விலை உட்பட கடிதமூலம் எழுதி தொடர்புகொள்ள வேண்டிய விலாசம்: நவீனஸ், 390, பிரதானவீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் [C 3071]

யாழ்ப்பாணத்தில் புதிதாகத் தொடங்கவிருக்கும் ஆங்கில மருந்தகம் (Pharmacy) ஒன்றிற்கு அனுபவமுள்ள விற்பனையாளர்களும் (பெண்கள் விரும்பத்தக்கது) பார்மஸிஸ்ட் ஒருவரும் தேவை. சம்பளம் பேசிமுடிவு செய்யலாம். தொடர்பு:- கவிதா நிறுவனம், 550/6 கே. கே எஸ். வீதி, (தட்டாதெருச் சந்திக்கு அண்மையில்) யாழ்ப்பாணம். (C-3127)

## சேவை

தட்டச்சு இயந்திரங்கள் [Typewriters] சிறந்த முறையில் திருத்திக்கொடுக்கப்படும். விலைக்கும் தமிழ், ஆங்கிலம், தட்டச்சு இயந்திரங்கள் வாங்கப்படும் Fudo Enterprises, 39/17 மின்சார நிலைய வீதி, (3ம் ஒழுங்கை), யாழ்ப்பாணம்.

## சேவை

புதுப்பிக்கப்பட்ட ஹொண்டா C 70, C 90 ஓட்டர்களுக்கு எடுத்துக் கொடுக்கப்படும். J P P Ltd 3, நவீன சந்தை, [மேல்மாடி], யாழ்ப்பாணம். [A 881]

எங்களை வந்து சந்தியுங்கள் நீங்கள் ஒரு வியாபாரம் அல்லது தொழிலை ஆரம்பிப்பதற்கு அல்லது விருத்தி செய்வதற்கு தொடர்பானஎப்படி, எப்பொழுது, எது, எங்கு, எவருடன் என்னும் கேள்விகளுக்கு விடை காண்பதற்கு K. Padmanathan. MBIM U K), Jaffna Institute of Industrial Management, 18/1, சுவாமியார் வீதி, கொழும்புத்துறை. [C 3128]

## வகுப்புகள்

108 Brown Road, Jaffna, A/L 87 சேதன இரசாயனம் ஆசிரியர் சதீஸ் ஆரம்பம் 30-06-86 திங்கள் 6-15 A M திங்கள், புதன் 6-15 A M) A/L 88 புதிய வகுப்புக்கள் ஆரம்பமாகிவிட்டன. (திங்கள், புதன், வெள்ளி 4-45 P M) [C 3067)

வாய்ப்பாட்டு, வயலின் வீணை, மிருதங்கம், கிற்றார், ஹார்மோனியம் நடன வகுப்புக்கள் நடைபெறுகின்றன. விபரங்களுக்கு: மு கண்ணன். நுண்கலைக் கல்லூரி, 646. கே. கே. எஸ். வீதி, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். [C 3114]

## வைத்தியம்

குழந்தைகள் ரோகம், நாட்பட்ட விரணம், மூலரோகம், மூலத்தால் இரத்தம் போதல், குடற்புண் (Ulcer), பெண்களுக்கான ரோகங்கள் முதலியவற்றிக்கு சிறந்த முறையில் சிகிச்சை அளிக்கப்படும். தொடர்புகொள்ள:- டாக்டர் [திருமதி] இ. தவயோகநாதன், 218/3 பலாலி ரோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம் [C 3135]

## மணப்பந்தல்

இந்துவேளாள Doctor, என்சினியர் Accountants, M S.C. Lecturers மணமக்களுக்கு 23—32 வயதுக்கிடைப்பட்ட மணப்பெண்களும், அரசாங்க பிரதம லிகிதருக்கு குற்றமுள்ள ஆசிரியையும், அரசாங்க பியோன்களுக்கு மணப்பெண்களும் தேவை. எம்மிடம் எல்லா இன, மத மணமக்கள் இருக்கிறார்கள். மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். C-3151

யாழ்ப்பாணம் சைவவேளாளர் குலம் சைவபோசன 42 வயது பெண்ணுக்கு அதே குலத்தைச் சேர்ந்த மணமகனை பெற்றோர் தேடுகிறார்கள். தாரம் இழந்தவராயினும் விரும்பத்தகுந்தது நியாயமான சீதனம்கொடுக்கப்படும் விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. C 3097 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். [C 3097]

## இன்று வண்ணை கதிரேசன் லட்சார்ச்சனை பூர்த்தி

(யாழ்ப்பாணம் ஞாயிறு)

வண்ணை அருள்மிகு ஸ்ரீசெந்தில் கதிர்வேலாயுதசுவாமி கோவிலில் கடந்த எட்டு நாட்களாக நடைபெற்ற லட்சார்ச்சனை இன்று பூர்த்தியடைகின்றது.

இன்றைய தினம் காலை 7-15 மணிக்குச் சங்காபிஷேகமும் தொடர்ந்து 8-30 மணிக்கு நியாசபூர்வ ஷண்முகார்ச்சனையும் தீபாராதனையும் நடைபெறும் பிற்பகல் 4-00 மணிக்கு சந்தனக்காப்புச் சாத்தப்பெற்று ஸ்ரீசெந்தில் வேலனுக்கு ஷண்முகார்ச்சனையும், விஷேசபூசையும் திருக்கல்யாணமும் தீபாராதனையும் நடைபெற்று மாலையில் பூந்தண்டிகையில் சுவாமி வெளிவீதி வருவார்.

நண்பகல் அடியார்களுக்கு அன்னதானம் நடைபெறும்

## வாடகைக்கு

ஸ்ரான்லி வீதியில் கடை வாடகைக்குண்டு. தொடர்பு: நியூ ராஜ்குலன் இன்டஸ்ரீஸ், 264, (52/1), ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். (C3 47)

சகலவசதிகளுடன் அமைந்த வீடு உடன் வாடகைக்கு கொடுக்கப்படும். தொடர்பு: கொள்ளவும், நா. முருகேசு, "இலக்குமி வாசா", கூளாவடிலேன், ஆனைக்கோட்டை. (C3144)

சிறிய குடும்பத்திற்கு ஏற்ற சகல வசதிகளும் உடைய Annex வீடு பிறவுண் வீதியில் வாடகைக்கு உண்டு தொடர்பு: பாலசுப்பிரமணியம், 125, பிறவுண்வீதி, யாழ்ப்பாணம். (C3146)

### சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ. உ)

## வெற்றுச் சாக்கு கேள்வி விண்ணப்பம்

சங்கானை பல நோக்குக்கூட்டுறவுச் சங்கத்தில் தரம் பிரிக்கப்பட்ட 2000. வெற்றுச்சாக்குகள் கேள்விப்பத்திரமூலம் விற்பனைக்குண்டு. வைப்புப் பணமாக ரூபா 250/-செலுத்தி விண்ணப்பப்படிவம். சங்கத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பங்கள் பதிவுத் தபால் மூலம் இடதுபக்க மூலையில் "வெற்றுச்சாக்குகேள்வி" என எழுதப் பெற்று பொதுமுகாமையாளர் சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் சங்கானை, என்ற விலாசத்திற்கு அனுப்பப்படல்வேண்டும்.

விண்ணப்ப முடிவுத் திகதி: 1 7-86.

**பொதுமுகாமையாளர்,**
சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

27-6-86. A 887

## Maternity and Nursing Home CHANKANAI

Applications are invited for the following posts.

1. MEDICAL OFFICER - MBBS.
2. TRAINEE DISPENSERS - Advance Level and pass in English at Ordinary level.
3. TRAINEE NURSES - Qualifications same as above.
4. CASHIER - Cash security required.
5. SECURITY GUARDS - Preference for Ex Service men.

MEDICAL OFFICER IN CHARGE

### ஸ்ரீலங்கா தேசிய உப்புக் கூட்டுஸ்தாபனம் ஆனையிறவு.

## பழைய புதினப் பத்திரிகைகள் விற்பதற்கான கேள்வி விண்ணப்பம்

ஆனையிறவு, குறிஞ்சாத்தீவு உப்பளங்களில் உள்ள இன்நல சங்கங்களுக்கு வாங்கப்பட்ட புதினப் பத்திரிகைகளை (தமிழ், ஆங்கிலம், சிங்களம்) ஆனையிறவு பிராந்தியக் கந்தோரில் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன. கூடுதல் விலையை எழுத்து மூலம் கோருபவர்களுக்கு பத்திரிகைகள் விற்கப்படும். 200 கிலோ எடையுள்ள பத்திரிகைகள் கைவசம் உள்ளபடியால் விண்ணப்பதாரர்கள் எழுத்துமூலம் 05-07-86க்கு முன்னர் மேற்காணும் விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும்.

பிராந்திய முகாமையாளர்,
(வ பி.)

[A-886]

## முதலாவது ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் கனகம்மா சுப்பிரமணியம்

மண்ணுலகு : 10-6-1920

விண்ணுலகு : 11-7-1985

திதி : 30-6-1986

அன்பின் உருவாய், அறிவின் சுடராய், பண்பின் நிறைவாய், பாசத்தின் பிறப்பிடமாய் வாழ்ந்து எமக்கெல்லாம் நல்வழிகாட்டிய அன்புத் தெய்வமே நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து ஆண்டொன்று சென்றாலும் உங்கள் நினைவு எமது இதயத்தை விட்டு என்றென்றும் பிரியாது நிற்கும்.

தங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்;

அன்புக் கணவன்,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

5, அம்மன் வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம். C 3154

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதாரத் தடைகளை தாக்குப்பிடிக்க முடியும்!

## — பிறிட்டோறியா அரசு அறிவிப்பு

லண்டன் ஜூன்- 28

இனவாத தென்னாபிரிக்க அரசுக்கு எதிராக கடுமையான பொருளாதாரத் தடையை விதிக்க வேண்டும் என்று ஐரோப்பிய பொருளாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

கிரேக்கில் கூடிய இவ்வமைப்பின் மாநாடு நேற்று முன் தினம் முடிவடைந்தது. கூட்ட இறுதியிலேயே தென்னாபிரிக்கா மீதான பொருளாதார தடை பற்றிய இந்தத் தீர்மானம் அறிவிக்கப்பட்டது.

தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள தென்னாபிரிக்க தேசியத் தலைவர் நெல்சன் மண்டெலா உட்பட ஏனையவர்களையும் விடுதலை செய்ய வேண்டும். தடுத்து வைக்கப்பட்டுள்ள கட்சிகள் மீதான தடைகளை அகற்ற வேண்டும். இந்த நடவடிக்கைகளில் தென்னாபிரிக்க அரசு ஈடுபடாவிட்டால் அதன் மீதான பொருளாதாரத் தடை தவிர்க்க முடியாததென்றும் அவ்வமைப்பு குறிப்பிட்டுள்ளது.

கறுப்பினத்தவர்கள் மீது தென்னாபிரிக்க அரசு கட்டவிழ்த்துள்ள அடக்கு முறைகளுக்கெதிராக பலத்தக் கண்டனத்தைத் தெரிவித்த இப் பொருளாதார அமைப்பு நாடுகள், இந் நிலைமை தொடருமாகில் பெரும் இரத்தக்களறி ஒன்றினை தடுத்து நிறுத்த முடியாதென்றும் கண்டித்துள்ளன.

இதேவேளை ஐரோப்பிய நாடுகள் தென்னாபிக்கா மீது எவ்வகையான பொருளாதாரத் தடைகளை விதித்த போதும் அவைகளுக்கு ஈடு கொடுத்து தனித்தியங்கக்கூடிய வல்லமையைதாம்பெற்றிருப்பதாக பிரிட்டோரியா அதிபர் திரு போத்தா சவால் விட்டுள்ளதாகவும் கூறப்பட்டது. [ரா]

## இலங்கையின் புதிய யோசனையை மத்திய அமைச்சர் சிதம்பரம் தமிழகமுதல்வருக்குவிளக்கினார்

சென்னை ஜூன் 28

இனப்பிரச்னைக் குறித்து இலங்கை அரசு முன்வைத்துள்ள புதிய யோசனைகளை இந்திய மத்திய அமைச்சர் திரு பி சிதம்பரம் தமிழக முதல்வர் திரு எம். ஜீ இராமச்சந்திரனுக்குத் தெளிவுப்படுத்தினார்.

மத்திய அமைச்சர் திரு சிதம்பரம் நேற்று முன்தினம் தமிழக முதல்வரை சென்னையில் சந்தித்தார். சுமார் அரை மணித்தியாலம் இடம்பெற்ற இச் சந்திப்பின்போதே முதல்வருக்கு இந்தப் புதிய யோசனைகள் பற்றி எடுத்துரைக்கப்பட்டது.

இதேவேளை இந்தப் புதிய யோசனைகள் பற்றிய திட்டத்தை இந்தியாவிலுள்ள ஐந்து போராளி குழுக்களுக்கும் நேற்று கையளிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

தமிழர் அமைப்புக்கள் இந்த யோசனைகளை ஏற்றுக் கொள்ளுமாகில் இவ் வமைப்புக்களுக்கும், இலங்கை அரசுக்கு இடையிலான பேச்சுக்களை தொடர்வதற்கு வாய்ப்பாக இருக்குமென்று திரு. சிதம்பரம் இது குறித்து கூறியுள்ளார். [ரா]

### போபால்:

## சட்டத்தரணிகள் வழக்குத் தாக்கல்

நியூயோர்க்- ஜூன்- 28

நியூயோர்க் உயர் நீதிமன்றத் தீர்ப்புக்கெதிராக அமெரிக்க சட்டத்தரணிகள் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளனர்.

போபால் நச்சு வாயு கசிவில் பாதிப்படைந்த சிலரின் வழக்குகளை இந்தியாவில் விசாரணை செய்யவேண்டும் என்று அந்த நீதிமன்றம் தெரிவித்துள்ளமைக்கு எதிராகவே இவ் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. [ரா]

## யாருடையது?

யாழ்ப்பாணம், ஞாயிறு

கடந்த ஒரு மாத காலமாக எவருமே உரிமை கோராத நிலையில் உள்ள சைக்கிள் வண்டி ஒன்று மானிப்பாய் மேற்கு திருவள்ளுவர் சன சமூக நிலையத்தில் இருக்கிறது. 'ஒறியன்ஸ்' இன இச் சைக்கிள் வண்டியை உரியவர்கள் யூலை மாதம் 6ந் திகதிக்கு முன்பாக தகுந்த அத்தாட்சி காட்டிப்பெற்றுக் கொள்ளுமாறு மேற்படி சன சமூக நிலையத்தினர் வேண்டுகின்றனர். குறித்த திகதியின் பின்னர் மேற்படி சைகிள் பகிரங்க ஏலத்தில் விடப்படும் என்று தெரிகிறது. [ஐ]

யாழினிது!
கூழ்ழினிது!!
யாழ். பீச் இன்சில்
மகிழ்வுடன் பருகிட
இனிது! இனிது!
வாரீர் ஒவ்வொரு ஞாயிறு தினமும்
இயற்கையின் இன்பச் சோலையில்
யாழ் மக்களின் அத்தனை
உணவுப் பண்டங்களும்
தித்திக்கும் சுவைகளில்!
எமது அறைகளில் களைப்பாறி மகிழ்ந்து
உங்கள் கவலைகளை மறந்துவிடுங்கள்!

**யாழ். பீச் இன்ஸ்,**
139, கடற்கரை வீதி,
பழைய பூங்கா வீதிச் சந்தி
யாழ்நகர்.
(A-756)

Lipton

லிப்டன் லாவோஜி பிரியர்களுக்கோர்
நற்செய்தி

புதிய குறைந்த விலையில், அதி நிறைந்த சுவையுடன் "லிப்டன்" வாசகம் பொறிக்கப்பட்ட அலுமினியம் சுற்றுத்தாளில் அடைக்கப்பட்டு புதிய பொலிவுடன் "லாவோஜி" தேயிலைப் பக்கட்கள் இப்பொழுது எங்கும் விற்பனை செய்யப்படுகின்றன.

போலி லிப்டன் லாவோஜி பக்கெட்டுகள் விற்பனைக்கு விடப்பட்டுள்ளதனால் லாவோஜி தேயிலை வாங்கும்போது, மேற்கூறப்பட்ட முக்கிய அம்சங்களை அவதானித்து அசல் லாவோஜியை உங்கள் மொத்த, சில்லறை, வியாபாரிகளிடம் பெற்றுக் கொள்ளுங்கள்.




புதிய விலை: ரூபா 3/60 (50 கிறும்)

லிப்டன் சிலோன் லிமிட்டெட்,
த. பெ. எண் 86,
கொழும்பு.

லிப்டன் லவோஜி
அதி சிறந்த தேயிலைத் தூள்

A 493

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று 172-வது ஆண்டு நிறைவு

# மெதடிஸ்த திருச்சபையும் அதன் திருப்பணிகளும்

செல்வி பிரியாழினி அருள் அன்னராஜா

இன்று இலங்கையிலுள்ள ''மெதடிஸ்தவர்கள்'' யாவருக்கும் ஒரு சிறப்புத் தினம். நம் நாட்டிலேமெதடிஸ்ததிருச்சபை ஆரம்பித்து 172 ஆண்டுகள் ஆகின்றன.

இந்த மெதடிஸ்த திருச்சபையின் ஆரம்பகர்த்தாவான ஜோன் வெஸ்லி ''உலகமே என் பணியின் இடம்'' என்றுரைத்தார். அவரின் உயிர் உள்ள நாதம் இன்னும் எமது நாட்டிலே உறுதியுள்ள மெதடிஸ்த திருச்சபையாக ஒலித்துக் கொண்டிருப்பதை நாம் உணரலாம் 1813 ம் ஆண்டிலே பிரித்தானிய மெதடிஸ்த குருவாகிய 66 வயது நிரம்பிய வண-கலாநிதி தொமஸ் கொக் அவர்கள் கிறிஸ்துவின நற்செய்தியைத் தான் இலங்கைத் தீவிற்கும் கொண்டுசெல்வதற்கு அனுமதி வழங்குமாறு பிரித்தானிய மெதடிஸ்த சங்கத்தை கேட்டார் தோமஸ் கொக்என்பவரின் வயதையும், உடல் நிலையையும் கருத்தில் கொண்ட பிரித்தானிய மெதடிஸ்த சங்கம் அவருக்கு ஆரம்பத்தில் அனுமதி வழங்கமறுத்தது. ஆனுல் தோமஸ்கொக் மனம்தளாரதவராக, இலங்கை நாட்டிற்கு வருவதற்கு மிகவும்வாஞ்சையுடையவராக முதல் நாள் முழுவதும் ஜெபத்திலே தரித்திருந்தார்.

''இலங்கைக் கரையில் நான் ஆடையின்றியும், நண்பரின்றியும் இருக்க நேரிட்டாலும் அங்கு செல்லாதிருப்பதை விரும்பேன்'' என்று அவர் மிகவும் உணர்ச்சிவசப்பட்டுமெதடிஸ்த சங்கத்திலிருந்து அனுமதி பெற்றுக்கொள்ளவாதாடினுர். அவரின் வாதாட்டச் சிறப்பினுல் இலங்கைவர அனுமதியும் பெற்ருர்.

1813ம் ஆண்டு மார்கழி30 ந் திகதி இலங்கை நோக்கி கப்பலிலே, கிளவ், ஹவார்ட், லிஞ்ச், ஸ்குவான்ஸ், ஒல்ற், ஒஸ்கின் ஆகிய ஆறுகுருமார்களுடனும், திருமதி ஸ்குவான்ஸ். திருமதி ஒல்ற் ஆகியோருடனும் வண.தோமஸ்கொக் பயணப்பட்டார். இவர்கள் மேற்கொண்டபயணம் சொல்லமுடியாதகஷ்டத்தையும்துன்பத்தையும், இழப்புக்களையும் அவர்களுக்கு ஏற்படுத்தியது எனலாம்.

1814 ம் ஆண்டு மாசி மாதம் 10 ஆம் திகதி ஒல்ற் அம்மையார் சடுதியாக நோய்வாய்பட்டு இறந்தார் இந்த இறப்பின்துயர் அழிவதற்கு முன்பு அதேவருடத்தில் மே மாதம் 2 ந் திகதி இந்தப் பயணத்தை மேற்கொள்ள வேண்டும், என்று துடித்த தோமஸ்கொக் காலமானுர் ஈழவளநாட்டிற்கு நற்செய்தியினைக் ஆசையை நிறைவேற்ருது அவர் உலக வாழ்வினைக் கடவுளின் கரத்திலே ஒப்படைத்து விட்டார். வண தோமஸ்கொக் அவர்களுடைய இலட்சியத்தை நிறைவேற்ற வேண்டும் என்ற விடாமுயற்சியுடன் ஏனையோர் தம் பயணத்தைத் தொடர்ந்தனர்.

தம்பயணத்தைத் தொடர்ந்த மிகுதியானவர்கள் பம்பாய் துறைமுகத்துக்கு வந்தடைந்தனர். ஹவார்ட் அயர் பம்பாயில் தங்க, ஏனையவர்கள் 1814 ம் ஆண்டு ஜூன் மாதம் 29 ந் திகதி காலித் துறைமுகத்தை வந்து சேர்ந்தனர் இந்ததினத்தையேஇன்று இலங்கையிலுள்ள மெதடிஸ்த திருச்சபைமெதடிஸ்ததினமாக கொண்டாடுகின்றது 1814 ம் ஆண்டு ஜூலை மாதம் 11 ம் திகதி, காலியில்இலங்கைமெதடிஸ்த சபையின் முதலாவது கூட்டம்நடைபெற்றது அதில் திருப்பணியாற்ற இடங்களும் அதற்கு உரியவர்களும் நியமிக்கப்பட்டார்கள்.

காலிப்பிரதேசத்திற்கு கிளவ் அவர்களும், மாத்தறைப் பிரதேசத்திற்கு ஒஸ்க்கின் அவர்களும், யாழ்ப்பாணப் பிரதேசத்

[11-ம் பக்கம் பார்க்க]

## இவ்வாரம் எப்படி?

**இன்று**

மாதம்: ஆனி
திகதி: 15 (1986-06-29)
கிழமை: ஞாயிறு
திதி: அட்டமி
மு இ.வரை
நக்ஷத்திரம்: உத்திரட்டாதி பி.ப.வரை

### மேடம்

குடும்பப்பிணி தலைதூக்கும். ஏமாற்றப் படுவீர்கள். வரவிலும் வீழ்ச்சிதென்படும். அரசியல் வாதிகளுக்கு இவ்வாரம் அடி சறுக்கலாம். எதிலும் தடுமாற்றம் தென்படும். உஷாராக இருக்கவும்.

### இடபம்

எதிர்பாராத பொருள் வரவும் பொதுசனத் தலைமையும் கிடைக்கும். கலைஞர்களுக்கு சுபவாரம். பேச்சாளர்கள் போற்றப்படுவார். இவ்வாரம் நன்மையான காரியங்களுக்குப் பணம் செலவாகும். வாழ்க்கையும் வளமாகும்.

### மிதுனம்

கடமையில் சண்ணியம் தவறும். வாய்வுக் கோளாறினுல் வேதனைப் படுவீர்கள். சிறுவிபத்து மேற்படலாம். ஏக்கத்தின் சாயலும் தாக்கும். பணச்செலவுமுண்டு. குடும்பத்தில் பூசல்கள் தோன்றும்.

### கடகம்

அன்னையின் ஆதரவுபெருகும். வெளியிடத் தொடர்பினுலும் முன்னேற்றம் காணப்படும். வாகனச் சொந்தக்காரர்களுக்கு நன்மையுண்டு. எதிரபாராத தனவரவும் உண்டு.

### சிங்கம்

புத்திக் கூர்மையால் புகழ் கிட்டும். புண்ணிய விருப்பு மேலிடும். பொறியியலாளர்களுக்கு நன்மையுண்டு. விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை வெற்றிக்குவழிவகுக்கும்.

### கன்னி

அந்நியரின் பகையும் அக்கினியாயுத பீடையுமேற்படலாம். திடீர் பிரிவுகளும் தோன்றும். கொடுத்த வாக்கைக் காப்பாற்ற முடியாமல் திண்டாடுவீர்கள். குடும்பத்தில் பிணக்குகளும் தோன்றும்.

### துலாம்

களஸ்திரசுகம் கண்ணியம் சேரும் புதியமுயற்சிகளைக் கையாளுவீர்கள். சிலருக்கு குடும்பத்தில் புதிய ஸ்தானம்கிடைக்கும் தொழில் மகிழ்ச்சியும் தொல்லைகள்நிவர்த்தியுமுண்டு.

### விருச்சிகம்

ஆணவத்தைத் தவிர்க்கவும். எவரையும் பகைத்துக்கொளாதீர் பெண்கள் மிகவும் அவதானமாயிருக்கவும். அவப் பெயர்கேட்கநேரிடலாம். முன்னேற்றத் தடையுமுண்டு. போக்குவரத்து விடயத்தில் நிதானம் வேண்டும்.

### தனுசு

தனவரவும் பெரியோர் புகழ்ச்சியும் உண்டு. வெளியிடத்து தொடர்புகளும் சிறப்பைத்தரலாம். முன்னேற்றமான மாற்றங்களும் இடம் பெறும் வாழ்விலும் அமைதி காணும்.

### மகரம்

நன் மாற்றம் உண்டு. தொழில் நிலையிலும் அபிவிருத்தி காணப்படும். புதிய பொருள் கொள்வனவு செய்வதற்கு உகந்தவாரம். காதலர்களுக்கு கரும்பான வாரம். திடீர் வரவுமுண்டாம்.

### கும்பம்

குடும்பத்தில் குதூகலம் நீண்டநாள் எதிர்பார்த்த நல்லசெய்தி இவ்வாரம் கைகூடும். அந்நியர் உதவி தாராளமாக உண்டு. தேடிய உறவு உங்களை நாடியேவரும். வணிகர்களுக்கு வியாபாரவிருத்தியுண்டு.

### மீனம்

அந்நியர் பகை மேலோங்கி நிற்கும். தொழில்நிலை மந்தமாகவே இருக்கும். வீணுனசிந்தனைகளைத் தவிர்க்கவும். வாகனம் செலுத்துவோர் அவதானம் வேண்டும். நம்பிக்கை மோசடியும் நடைபெறும்.

திருமலை
**க.வே.ரவீந்திரன்**

'பெரி'ஸ்கோப்

கருணாநிதியைக் குண்டு வைத்துக் கொல்ல முயன்ற அப் 'பாவிகளை' நிந்தித்து, முன்னுள் தமிழக முதல்வரின் உயிருக்காக வடியும் முதலை(லி)க் கண்ணீர் 'கொப்டரி'லிருந்து கொட்டோ கொட்டென்று கொட்டுகின்ற ஒரு சூழலில் —

தமிழ்நாட்டிலுள்ள ஈழப் போராளிகளைத் தரிசிக்க 'விஜய மஹாராஜாக்கள்' விஜயங்களை மேற்கொண்டு வருகின்ற வேளையில் —

தமிழர் பிரச்னைக்கு முடிவுகட்டும் முனைப்பில், 'சர்வ கட்சி மகாநாடு' (A P C) என்று முன்னர் தண்டோரா போடப்பட்டு. இறுதிக்கணத்தில் வெறுமனே 'அரசியல் கட்சிகளின் மகாநாடு' (P P C.) என லேபல் மாற்றப்பட்ட அந்த மகாநாட்டின் முதல் சுற்று, கொழும்பில் நடந்து முடிந்திருக்கிறது.

# ஆடி 15 ஐ நோக்கி.....

இரண்டரைத் தஸாப்தங்களாக இழுபறிப்பட்டு வந்ததும் எத்தனையோ உயிர்களை இரையெடுத்ததுமான இந்தத் தமிழர் பிரச்னைக்கு முடிவுகட்டுவதற்குப் பார்த்தசாரதி முதல் பண்டாரி உள்ளிட்டு சிதம்பரம் வரை பம்பரமாய்ச் சுழன்று பகீரதப் பிரயத்தனம் மேற்கொண்டு ஒழுங்கு செய்யப்பட்ட மாநாட்டின் முதல் சுற்று 75 நிமிடங்களில் நடைபெற்று முடிந்தது பெரிய சாதனைதான்! இதில் ஜனுதிபதி காட்டியுள்ள 'அசுர வேகம்' தமிழர் பிரச்னையைத் தீர்ப்பதில் அவர் கொண்டுள்ள அபார 'கரிசனையை'யும் 'அக்கறை'யையுமே காட்டுகிறது!

எதிலுமே அவருக்கு ஒரு அசாதாரண வேகம்தான்!

இந்த இழுபறியை எப்போதோ தவிர்த்திருக்கக்கூடிய பண்டா-செல்வா உடன்படிக்கையை ஒரு மணிநேர பாதயாத்திரையுடன் சுக்குநூருகக்கிழித் தெறியச் செய்த அசகாய சூரராயிற்றே இவர்!

''போரென்ருல் போர், சமாதானமென்ருல் சமாதானம்!'' என ஒரு சில வார்த்தைகளை மட்டும் திருவாய் மலர்ந்தருளி இலங்காபுரியை எரிய வைத்தநவீன ஆஞ்சநேயராயிற்றே இவர்!

சும்மா சொல்லக்கூடாது இவரது 'தராளம்' யாருக்கு வரும்? நினைத்த மாத்திரத்தில் தாம் கலைத்துவிடக்கூடிய மாகாண சபைகளை தமிழரின் சுயபரிபாலன உரிமை பேண வழங்குகின்ற வள்ளன்மை இவர் போன்ரேருக்கு மட்டுந்தான் வாய்க்கும்!

தமிழர் பிரதிநிதிகள் பங்கு பற்ருவிட்டால் இந்த மாநாடு மாப்பிள்ளையில்லாக் கல்யாண'மாக மாறிவிடுமே என்ற நினைப்பில் தான் குமார்வேறு மாநாட்டுப் பந்தலுக்குச் சென்ருரோ? சென்ருலும் சென்று வந்தார் வந்தவுடனேயே அது வெறும் 'வாய்ப்பநதல்' தான் என விசனப்படுகின்ருர்.

நண்பகல் மகாநாட்டில் பங்குபற்றிய கட்சிகளுக்கும் மாலை வீடுதேடி வந்த திருமதி சிறிமாவுக்கும் தனது புதிய யோசனைகளை எழுத்தில் வழங்கி அவற்றை நன்ருகக் 'கரைத்துக்குடித்து' விட்டு அடுத்தமாதம் 15ந்திகதி வருமாறு ஜனுதிபதி கூறியிருக்கிருர். அவர் கொடுத்துள்ள இந்த 'வீட்டு வேலை'யை (Home work) எமது அரசியல் மாணவர்கள் செய்து முடிப்பதும் முடிக்காமல் விடுவதும் வேறு விஷயம். ஆனுல் ஆடி 15 ஆடியாடி வருவதற்குள் என்ன நடக்கப்போகிறது?

நடப்புகளைப் பார்த்தால் எதுவும் நடக்கும் என்றே படுகிறது. அடுத்தகட்டத்தை ஆரம்பிக்கலாமா?

பிதா. சிங்கராயர் விடுதலை மீதான அப்பீல் வழக்கு:

# "பிரபாகரனும் கொள்ளையில் பங்கெடுத்தார் என அர்த்தம் கொள்ள முடியாது!"

## வழக்கறிஞர் குமாரசுவாமி தொடர்ந்து வாதம்

கொழும்பு சனி

''நீர்வேலி வங்கிக் கொள்ளையில் பிரபாகரன் குழுவும் 'ரெலோ'வும் பங்கெடுத்தன என்பதே யாழ்ப்பாண மக்கள் மத்தியில் அடிபட்டகதையாக இருந்தது என்று மட்டுமே பிதா. சிங்கராயர் கூறியிருந்தார். பிரபாகரன்குழு கொள்ளையில் பங்கெடுத்ததால்பிரபாகரனும் அதில் பங்கெடுத்திருக்க வேண்டும் என அர்த்தம்கொள்ள முடியாது. கொள்ளை நடைபெற்ற நேரத்தில் பிரபாகரன் இந்தியாவில் கூட இருந்திருக்கலாம்.''

பிதா. சிங்கராயர் வழக்கில் கொழும்பு உயர் நீதிமன்ற நீதிபதி வழங்கிய தீர்ப்பினை ஆட்சேபித்து மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கில் மேலதிக

வைத்த வாதங்களுக்குப் பதிலளித்துப் பேசுகையிலேயே பிதா. ஆபரணம் சிங்கராயரின் சிரேஷ்ட வழக்கறிஞர் திரு. ஈ. ஆர். எஸ் ஆர். குமாரசாமி மேற்கண்டவாறு கூறினர்.

நீதிபதிகள் திரு. ஜஸ்டின் அபேவர்த்தன, திரு ஆர். என். எம். தீரரத்ன, திரு ஏ. எஸ். விஜேதுங்கா ஆகியோர் முன்னிலையில் நடைபெறும் மேற்படி அப்பீல் வழக்கில் சிரேஷ்ட வழக்கறிஞர் திரு. குமாரசாமி மேலும் வாதித்தாவது;

''நீர்வேலி வங்கிக் கொள்ளை பற்றி பிதா. சிங்கராயர் எவ்வாறு தகவல் பெற்றிருந்தார் என்பது பற்றி அறிந்துகொள்ளுவதில் விசாரணை அதிகாரி திரு. புண்யா டீ சில்வா தகுந்த கவனம் செலுத்தாமலிருந்ததை உயர்நீதிமன்ற நீதிபதியே குறிப்பிட்டிருந்தார். யாழ்ப்பாண மக்கள் மத்தியில் அடிபட்ட கதைகளின் அடிடபடையிலேயே பிரபாகரன் இக் கொள்ளையில் பங்கெடுத்திருக்கமுடியும் என சந்தேகப்பட்டிருபாராயின், பிரபாகரனின் பங்கெடுப்பு பற்றிய நேரடித்தகவலை பிதா சிங்கராயர் எவ்வாறு பெற்றிருக்கமுடியும் என்பது குறித்து ஒருவரால் உணர்ந்துகொள்ள முடியும்.

பிதா. சிங்கராயர் பொலிசாருக்கு அளித்ததாக் கூறப்படும் 'பி 37' சாட்சிய அறிக்கை சோடிக்கப்பட்டதொன்ருகும். பிதா. சிங்கராயரிடம் கொடுக்கப்பட்ட பணம் வங்கியிலிருந்து கொள்ளையடித்தபணம்தான் என்று கூடக் கருதினுலும், திருட்டுச் சொத்தை வைத்திருந்தமைக்

(9ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'குமுதினி' முதல் 'அன்னைமேரி' வரை

# கடலிலும் படகிலும் நித்தம் தொடரும் வதைகளும் கொலைகளும்!

'கடல்சூழ்' உலகம் எனக் கூறும்போது உலகமே கடல் தாயின் அன்பான அரவணைப் பினுள் இருக்கின்றுற் போன்ற பிரமையே எமக்கு ஏற்படு கின்றது.

கடல் ஒரு தாயெனில் அங்கு கனிஜ ஊற்றுக்கள் மட்டுமன் றிக் கருணை ஊற்றுக்களும் நிச் சயம் இருந்தாகவேண்டும்.

ஆனல்—

கருணை சுரக்கின்ற அந்தக் கடல் தாய் இன்று ஏன் எமக் குப் பயங்கரத்தின் உறைவிட மான பைசாஸமாகக் காட்சி யளிக்கவேண்டும்?

கடற்பரப்பின் மகிமையை யும், புனிதத்தையும் மான பங்கப்படுத்தியது யார்?

உலக சமுத்திரத்தில் 'கடல் கொள்ளைக்காரர்கள்' அட்ட காசம் புரிந்த பொல்லாதகால மொன்றிருந்தது. அந்த அட்ட காசங்களைத் திரைப்பட வடி வில் திகில் படங்களாகப்பார்த் தோருக்கு மயிர்க்கூச்செறி யவே செய்தது.

ஆனல், எமது பிரதேசக் கடல்வலயங்களில் இன்று ''கடல் கொலைகாரர்கள்'' நடாத்தி வருகின்ற படுபாத கங்களைப் பார்க்கும்போது எமது ஈரல் குலைகளே நடுங்கு கின்றன!

ஒரு சாண் வயிற்றை நிரப்பு வதற்குத் திரைகடலில் கரை வலை இழுக்கப் போவோர் கண்டதுண்டமாக வெட்டிக் குதறப்படுவது ஒருபுறம்......

தாக்குதலுக்கு அஞ்சித் தற் பாதுகாப்புக்காய் உயிரைக்

[redacted] 'பெரி'

கையில் பிடித்துக்கொண்டு தொலைதூரப் புகலிடம் தேடி யோடுவோர் நடுக்கடலில் பீரங்கிப் படகுகளின் தோட் டாக்களுக்கு இரையாகுவது இன்னெரு புறம்.....

கடல் தீரங்களில் சிப்பி பொறுக்கும் சிறுவர்கள் இன்று 'ஷெல்' கூடுகளைப் பொறுக்கு கின்ற 'புதுமை' மறுபுறம்...

கடல் என்ற மாத்திரத்தில் உடல் நடுங்கும் நிலை ஏன் உரு வானது? கருணையும் சம்பத் தும் மிக்க கடற்பரப்பை தீட் டுப்படுத்தும் இந்தக் கயவர் களின் உடைமட்டுந்தான் கறுப்போ? அவர்களின் உள் ளங்களும் கறுப்புத்தானே?

நெடுந்தீவு- 'குமுதினி' யில் வந்தவர்களின் உடல்கள் கறுப் புக்கழுகுகளின் விஷநகங் களால் குதறப்பட்ட அந்தப் படுபாதகத்துடன் வெடித்த குமுறல் ஓயாது துயரப்படல மாய்த் தொடர்கிறது! 'குமு தினி'ப் பயங்கரம் ஒரு துர திஷ்டவசமான அசம்பாவித மல்ல, அது திட்டமிடப்பட்ட கடல் பயங்கரத்துக்குக் கூறப் பட்ட கட்டியமே என்பது இப் போதுதான் புரிகிறது!

கடல்வலயச் சட்டத்தால் குடித்த கஞ்சியே பறிபோன பரிதாப நிலையில் 'தூயஒளி' படகில் கரைவலை வீசச்சென்ற அந்த முப்பத்தைந்து பேர்கள் மண்டைதீவுக் கடலில் குத்திக் குதறப்பட்டதால் குருநகர் மீது கவிந்த சோக மேகங்கள் இன்றும் கலையாதிருக்கின்ற ஒரு நிலையில்—

பூநகரி—நாச்சிக் குடாவில் 'அன்னை மேரிக்கு' நேர்ந்த கொடூரம் பேரதிர்ச்சியை ஏற் படுத்தியுள்ளது அக்கரைக்குச் சென்றுல் உயிர்தப்பலாம் என் றெண்ணி 'அன்னை மேரி'யில் ஏறியவர்களின் சடலங்கள் இக்கரையில் இன்னும் வந்து கரையொதுங்கிய வண்ண மிருக்கின்றன......!

எதுவரை இந்தக் கடல் பயங்கரம் தொடரப் போகி றது? சொந்த பூமியை இழந்த இந்த மண்ணின் மைந்தர்கள் 'இனிக் கடல்தான் எமக்குக் கதியோ?'' எனக் கலங்கி நிற்கும் வேளையில் 'இன்று கடல்கூடக் கதியில்லையே!' எனக் கதறியழும்நிலை ஏற்பட் டுள்ளது!

பொறுமையுள்ள பூமாதேவி யும், கருணையுள்ள கடல் தாயும் எம்மக்களை ஒரேயடி யாகவே கைவிட்டு விடுவார் களா?

அன்று 'குமுதினி'; அடுத் தது 'தூய ஒளி'; இன்று 'அன்னை மேரி'...... இனி..?

கடலில் தொடரும் கொலை யும், வதையும் நீண்டு கொண்டே போகுமா?

மீன்கள் செத்துவிடுமே என இரங்கி கடலில் 'டைனமைற்' வைத்து மீன்பிடிப்பதைத் தடைசெய்யச் சட்டந்தீட்டிய ஜீவகாருண்யசீலர்கள் கடலில் கத்தியால், வாளால், குண் டால், பீரங்கியால் பச்சையா கவே மனித உயிர்களைப் பறிக் கின்ற படுபாதகங்கள் பற்றி இன்னும் எவ்வளவு காலத் துக்கு மௌனம் சாதிக்கப் போகிறுர்கள்?

இதெற்கெல்லாம் பதில் சொல்ல இங்கு யாரிருக்கிறுர் கள்? விதியே! தமிழ்ச் சாதியை என்ன செய்யப்போகின்றுய்?

## கவிக்கு ஒரு கண்ணதாசன்

அண்ணுவின் பகுத்தறிவுக் கொள்கைகட்கு என்ன
அர்த்தமுள்ள இந்துமதக் கதைகளுக்கு என்ன
கண்ணெனவே கிறிஸ்துமதத்தார்கள் போற்றுகின்ற
கருணைமிகு யேசுபிரான் காவியத்துக் கென்ன
தன்மானத் தமிழுணர்ச்சிக் கவிதைகளுக்கு கென்ன
தரமான எண்ணங்கள் எழுத்துகளுக் கென்ன
மன்னவன் கவி கண்ணதாசன் தானென்று
மதலைகளும் குதித்தெழுந்து மகிழ்வோடு பாடும்!

மஞ்சத்தில் மாதரொடு துஞ்சுகின்ற இன்பம்
மது மனதை மாற்றுகின்ற மயக்கநிலை இன்பம்
நெஞ்சத்தைத் திறந்துமிக நேர்த்தியாகச் சொன்னுன்
நெஞ்சுறுதி மிகக்கொண்ட கவிகண்ணதாசன்!
வஞ்சகமாய் வாழ்ந்தோர்க்கும் வாழ்வளித்த வள்ளல்!
வறுமையிலும் நிறைவுகண்ட வண்டமிழ்த்தொண்டன்
அஞ்சுதலே அறியாத நல்லாத்ம ஞானி!
அருந்தமிழிற் பெருங்கவிஞன் கண்ணதாசன்.

அன்பு அறிவான்மீகம் அரசியல்களோடு
அஞ்சாமை ஆளுமை யென்றடுக்கடுக்காய்ப்பாடி
தென்றலொடு புயலாகப் புதுமை பல செய்து
தேனேடு திராட்சை ரசம் சேர்த்தெமக்குத்தந்தான்!
என்னகுறை எவர் சொன்னபோது மதை மறந்து
எண்ணமெலாம் எழிற்கவியாய் படைத்தளித்தவேந்தன்!
கண்ணுன கவியரசன் கண்ணதாசன் வாழ்ந்த
காலமதில் வாழ்ந்த பெரும்பேறதனைப் பெற்றேம்.

-க. பொ. நடனசிகாமணி

# வாழையை வாழவைக்க வழிமுறைகள்



தற்சமயம் யாழ். மாவட் டத்தில் விரைவாக பரவிவரும் குருத்தழுகல் என அழைக்கப் படும் வாழைதொற்று வெளி றல் ஒரு வைரஸ் நோயாகும். ஆங்கிலத்தில் காட்ரொட் [Heart Rot] என அழைக்கப் படுகிறது. பூசணிக் குடும்ப சித் திரவடிவு வைரசே குருத்தழு கலை ஏற்படுத்துகிறது. மிள காய் போன்ற தாவரங்களை இவ்வைரசு தாக்கும். வாழை யில் ஏற்படும் காயங்களூடாக கலச்சாற்றின் சாற்றின் மூலம் பரவுகிறது.

வளமற்ற மண், வறட்சி ஆகிய பாதகமான நிலைமை களில் இந்நோய்த்தாக்கம் கூடுதலாக காணப்பட்டு வாழைமரம் நலிவுறுகிறது. தாக்கம் அதிகரிக்கும்போதே அறிகுறிகள் தென்படும்.

### இந்நோய் பரவும்விதம்

(அ) மிளகாய் பயிரிலுள்ள அழுக்கணவன் இந்நோயை பரப்பும் ஒரு காவியாகும். அழுக்கணவன் நோயுள்ள வாழையின் சாற்றை உறிஞ் சும்போது வைரஸ் கிருமிகள் தொற்றிக்கொள்ளும். பின் நோயில்லா வாழையில் அழுக் கணவன் சாற்றை உறிஞ்சும் போது தொற்றிய வைரஸ் கிருமிகள் கலச்சாறு மூலம் பரவி நோயை ஏற்படுத்தும்.

(ஆ) நோயுள்ள வாழையில் பாவிக்கப்பட்ட உபகரணங் களை தொற்று நீக்கம் செய்யா மல் நோயற்ற வாழையில் பாவிக்கும்போது காயங்களி னூடாக வைரஸ் பரவி இந் நோயை ஏற்படுத்தும்.

(இ) வேறு இடங்களிலிருந்து இந்நோயுள்ள நடுகை குட்டி களை கொண்டுவருவதன் மூலம் எமது தோட்டத்தில் இந்நோய்பரவும்.

### நோயின் அறிகுறிகள்

(அ) இலைகள் சிறுத்தும் குவிந்தும் காணப்படும்.

(ஆ) வாழைக்குட்டிகளின் [ஹிஞ்சி] போலித்தண்டின் நுனியில் இலைகள் ஒடுங்கியும் சிறுத்தும் காணப்படும்.

(இ) இலையின் நடுநரம்பில் ஆரம்பமாகி விளிம்புவரை அழுகல் தொடரும். ஒழுங் கற்ற இலைவெளிறல் காணப் படும். இளம், இலைகள் வெண் மையாகவும் முதிர்இலைகள் மஞ்சளாகவும் காணப்படும். பின்தொடர்ந்து கபில நிற மாக மாறும்.

(ஈ) இலைகள் வாடிக்கருகும்.

(உ) குருத்து முழுமையாக அழுகும்போது கரைஓரங்கள் கருகியும் குருத்து நெழிந்தும் கிழிந்தும் காணப்படும். குருத்து தொடர்ந்து அழுகுமா யின் குலைபோடமாட்டாது. தாக்கம் குறைவாக இருக்கும் சமயங்களில் சிறியதாகவும் அமைப்பில் வேறுபாடு உடைய குலைகளையும் போடும். வாழை மரத்தை நெடுக்காக வெட்டி ஞல் குருத்து நெளிந்து நெளிந் தும் இடையிடையே அழுகி யும் காணப்படும்.

(ஊ) காய்ந்த விளிம்புகளு டன் இலைகள் அரைகுறையாக வெளித்தோன்றும். அவ்வித மான இலைகள் நிமிர்ந்து நிர்க் கும் வாழையை குறுக்கே வெட்டும்போது குருத்து வளர மாட்டாது.

### நோய்க் கட்டுப்பாடு

வைரஸ் நோய்களைக் கட்டுப் படுத்த சிகிச்சைமுறை இல்லா மையால் நோயுற்றவாழையை பிடுங்கி அழித்தல்வேண்டும். இல்லாவிடில் அவை தொடர் ந்து பரவுவதற்கு ஏதுவாய் இருக்கும். தாக்கப்பட்ட வாழையில் அழுக்கணவன் காணப்படுமாயின் மண் ணெண்ணை தெளித்து வாழை யைப் பிடுங்குவதனுல் அழுக் கணவன் பரவாமல் தடை செய்யலாம்.

### தடை முறைகள்

[வருமுன் காப்போம்]

இந்நோயை கட்டுப்படுத்த முடியாமல் இருப்பதால் இந் நோய் வராமல் தடைமுறை களை கையாளுவதே சிறந்த

**மு. கந்தசாமி**

முறையாகும். அதன் மூலமே வாழையில் இந்நோய் வரா மல் பாதுகாத்துக்கொள்ள லாம்.

[அ] காவிகளை அழிக்க வேண்டும். அழுக்கணவன் குருத்தழுகலை மட்டுமன்றி குருமன் அல்லது கொத்து முனையை ஏற்படுத்தும் வைரஸ் சையும் தாவுகிறது. எனவே அழுக்கணவன் காணப்பட் டால் பி. எச். சி. 10 வீதம் [B. H. C.] பவுடர் பாவிக்க லாம். அழுக்கணவனை அழிப்ப தால் மறுவாழைக்கு இந் நோய் பரவுவது தடைப்படு கிறது.

[ஆ] நோயினுல் தாக்கப் பட்ட வாழையை பிடுங்க பாவித்த உபகரணங்களை கொதி நீரில் தொற்றுநீக்கவும்.

[இ] நடுகைக்கு குட்டிகளை பெயர்த்து எடுப்பதற்கு சுத்த மான உபகரணங்களை பாவிக் கவும்.

[ஈ] நோயால் தாக்கப்பட்ட வாழையின் அடியிலிருந்து குட்டிகளை எடுக்கவேண்டாம்.

[உ] வாழைத் தோட்டத்தி லும் அதன் சுற்றுடலிலும் பூசணக்குடும்ப சித்திர வடிவு நோயினுல் பாதிக்கப்பட்ட பாகல், புடோல், பூசணி, புகையிலை, மிளகாய், வெண்டி போன்ற பயிர்கள் காணப்பட் டால் அவற்றை அழித்துக் கொள்ளவும். 'சித்திரவடிவு' நோய் காணப்படின் தாவரத் தின் நரம்புகள் ஆரம்பத்தில் வெளிறும். அதனைத்தொடர் ந்து இலைப்பரப்பில் மென் பச்சை, கடும்பச்சை சித்திர வடிவங்கள் காணப்படும்.

[ஊ] இயன்றவரை வாழைத் தோட்டத்தையும், வாய்க் கால், வரம்புகள், வேலி ஓரங் கள் போன்றவற்றைக் களைகள் இல்லாமல் வைத்திருக்கவேண் டும். களைகள் ஒரு இடைக்கால விருந்து வழங்கியாக இருப்ப தால் களைகளில் இந்நோயைப் பரப்பும் வைரஸ் தங்கலாம்.

[எ] நோயால் தாக்கப் பட்ட வாழையைப் பிடுங்கிய இடங்களில் கிடங்கைவெட்டி குப்பை கூழம் இட்டு எரித்து ஆறவிட்ட பின்னர் மாற்றுப் பயிர்கள் செய்யலாம்.

சென்ற ஆண்டுகளில் குறைந் தளவில் காணப்பட்ட குருத் தழுகல் வாழைப் பயிரின் வளர்ச்சிக்குப் பாதகமான வறட்சி போன்ற சூழ்நிலைகளி ஞல் தாக்கம் விரைவாக ஏற் படுகிறது. தற்சமயம் காணப் படும் வறட்சியும், இந்நோய் உக்கிரமடையக் காரணமாக வுள்ளது. எனவே விவசாயிகள் மிகக் கவனமாக நாளாந்தம் வாழைத்தோட்டத்தை அவ தானிக்கவும். இந்நோய் வந்த வாழைகள் மற்றைய வாழை களிலிருந்து இலகுவாக வேறு படுத்தி அறியலாம். நோய் அறிகுறி காணப்படின் உட னடியாக தடைமுறைகளை கையாண்டு இந்நோய் பரவா மல் பாதுகாத்துக்கொள்ள லாம். தடைமுறைகளை நாளாந்த நடைமுறைகளில் செயல்படுத்திஞல் இந்நோய் உங்கள் வாழைத்தோட்டத் துக்கு வரவேமாட்டாது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

ஆரம்பக் கல்வி

# நூல் சார்ந்த கல்வியும் தொழில் சார்ந்த கல்வியும்

(முன் தொடர்ச்சி)

ஆரம்பக் கல்வியின் தோற்றம், உருவாக்கம், வளர்ச்சி, அதில் ஏற்பட்ட மாற்றங்கள் என்பன பற்றி வரலாற்று ரீதியாக இக்கட்டுரை பரிசீலனை செய்கிறது. இலங்கை முழுவதையும் ஆய்வுக்குரிய புலமாக எடுப்பின் கட்டுரை விரியும் என அஞ்சி இலங்கையில் தமிழர் வாழும் பிரதேசம் ஈண்டு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

இலங்கையின் வடபால் அமைந்துள்ள தமிழ் மக்கள் வாழுகின்ற பிரதேசம், பண்டு தொட்டு தென்னிந்தியாவுடன் பண்பாட்டுத் தொடர்பினைக் கொண்டிருந்தமை பற்றிய தகவல்களை அவற்றின் ஆதி வரலாறுகள் தெரிவிக்கின்றன. அகழ்வாராய்ச்சிகளும் புலப்படுத்தியுள்ளன. தென்னிந்தியாவில் நிலவியதை ஒத்த பெருங்கற்பாண்பாடு, இங்கும் தமிழ்மக்கள் வாழும் பிரதேசத்தில் காணப்பட்டிருந்தமைக்குரிய ஆதாரங்கள், கந்தரோடையில் மேற்கொண்ட அகழ்வாராய்ச்சிகள் மூலம் கிடைக்கப்பெற்றுள்ளன. யாழ்ப்பாணப் பல்கலைக் கழக வரலாற்றுத் துறையினர், ஆனைக்கோட்டை, காரைநகர் ஆகிய இடங்களில் மேற்கொண்ட ஆய்வுகளின் விளைவாகக் கிடைக்கப்பெற்ற ஆதாரங்கள் இதனை மேலும் உறுதிப்படுத்தியுள்ளன. சந்தரோடையின் பெருங்கற் பண்பாட்டுக்காலத்தை கி. மு. 500 ஆண்டுகட்கும் முற்பட்டதாக ஆய்வுமுறைக் காலக் கணிப்புக்கள் வெளிப்படுத்தியுள்ளன. இக்காலம் தொடங்கியே தென்னிந்தியாவிலிருந்து தமிழ்மக்கள் இங்கு வந்து குடியிருப்புக்களை அமைத்திருந்தனர் எனலாம். இவ்வாறாக, இங்கு வந்து வாழ்ந்த தமிழ் மக்கள் தாயகத்துடனான பண்பாட்டு உறவுகளைப் பேணி வந்துள்ளனர்.

கைலாயமாலை, வையா பாடல், யாழ்ப்பாண வைபவ மாலை ஆகிய நூல்கள் ஈழத் தமிழர் வரலாற்றைக் கூறுவனவாக அமைந்துள்ளன. பண்டைய மன்னர்களின் வரலாற்றினை அறிந்துகொள்வதற்கு மாத்திரமல்ல அக்காலத்து மக்களின் வாழ்க்கை முறைகள், பண்பாடுகள், கல்வி கலாசாரங்கள் பற்றியும் ஆராய்ந்து அறிவதற்கு உதவுவனவாகவும் இந்நூல்கள் விளங்குகின்றன.

தென்னிந்தியத் தமிழ்நாட்டுடன் ஈழத் தமிழர்கள், பெருங்கற்பண்பாட்டுக் காலந் தொடக்கம் நெருங்கிய பிணைப்பும், தொடர்பும், பரிவர்த்தனைகளும் கொண்டிருந்தனர். இவற்றின் விளைவாகத் தமிழ் நாட்டில் இக்காலகட்டங்களில் நிலவிய சமயம், கல்வி, கலை, கலாசாரம், அரசியல், பொருளாதாரம், பண்பாடு என்பவை சார்ந்த கருத்துக்கள், நடைமுறைகள் என்பனவற்றில் செல்வாக்கும் தாக்கமும் இங்கும் இடம்பெற்றிருக்கின்றன என்று கூறலாம். இந்த வகையில், பண்டைய ஈழத் தமிழர்களின் கல்வி, அதே காலப் பகுதியில் தென்னிந்தியத் தமிழர்களின் கல்வி முறையை ஒத்திருந்ததாகவே அமைந்திருந்தது எனலாம். மிகப்பண்டைக் காலத்திலிருந்தே தமிழ்மக்கள் கல்விக்கு முக்கியத்துவம் அளித்துத் தமக்கென ஒரு சிறந்த கல்வி மரபினை உருவாக்கியிருந்தனர் என்பதைப் பண்டைய தமிழ் இலக்கண, இலக்கிய நூல்கள் எடுத்துக் காட்டுகின்றன.

பழந்தமிழர் மரபிற்கும், அவர்தம் கல்வி மரபிற்கும் இணைப்புண்டு. தமிழ் மரபு தனித்துவம் வாய்ந்தது. வேறு மரபுகளின் தாக்கத்திற்கு இசைந்து கொடுக்காதது. புராதன காலத்தில், பாரதத்தின் வடபகுதியில் நிலைகொண்டிருந்த பிராமணக் கல்வி முறையும், பௌத்தக் கல்வி முறையும் தெற்கே தமிழ் நாட்டிற்கு வந்து சென்றிருக்கின்றன ஆனால் ஏற்கனவே நன்கு நிலைபெற்றிருந்த தமிழ் மரபினை அவற்றால் தகர்க்க முடியவில்லை.

பழந்தமிழ் மக்களின் வாழ்க்கை நிகழ்வுகளிலிருந்தே, வாழ்வியற் கொள்கைகள் பிழிந்தெடுக்கப்பட்டன. அவர்கள் இலக்கியத்திற்குத்தான் இலக்கணம் அமைத்தனர். செயலிலிருந்து தோன்றும் தத்துவம், செயற்பாடாகக் கூடியது. அவர்களின் வாழ்க்கைத் தத்துவங்களே கல்வித் தத்துவங்களாகவும் விளங்கின. கல்வித் தத்துவங்கள் அவர்களின் வாழ்க்கையை நெறிப்படுத்துவனவாக அமைந்தன. கற்றல், அதற்குத்தக நிற்றல் ஆகிய இரண்டும் கல்வி மரபில் இடம்பெற்றிருந்தன.

''உலகை ஒன்றாகக் காண்பதே கல்வி'' என்ற ஔவைப் பிராட்டியின்வரைவிலக்கணம் தமிழ்மரபு ஆகிவிட்டது. ''சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே' என்னும் புறநானூற்று அடி உணர்த்துவது மனிதப் பண்புகள் நிறைந்த சான்றோர்களைக் கல்வி உருவாக்கவேண்டும் என்பதையே யாகும். அன்பு, நாணம், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை எனும் ஐந்து சால்புகளை உடையவனே சான்றோன் எனக்கொண்டனர் தமிழ் மக்கள். சான்றோர்கள் மனம், மொழி, மெய்யினால் தூய்மையுடையவர்கள். இந்நிலைக்குக் கல்வி, மக்களை இட்டுச்செல்ல வேண்டுமென்பதே தமிழர் தம் கொள்கையாகும்.

''வாழ்க்கைக்கு உறுதுணையாய் வருவது தூயநற்கல்வி'' என்பது திருமூலர் திருவாக்கு வர்க்க, பால், பிறப்பு வேறுபாடின்றி எல்லோரும் கல்வியைக் கற்க வாய்ப்பிருந்த பண்டைத் தமிழகத்தில், கலவி மூலம் சமூகத்தில் மிக உயர்வான நிலையை அடைவதற்கு யாவர்க்கும் சமசந்தர்ப்பமும் இருந்தது. ''மன்னனில் கற்றோன் சிறப்புடையோன்'' என்று கூறக்கூடிய துணிவினைத் தமிழ்மரபுக் கல்வியேயளித்தது. கல்வியழகே அழகு என்று கல்வி ஏற்றிப்போற்றப்பட்டது. ஒவ்வொரு மனிதனும் உலகக் குடிமகன் ஆகவேண்டுமென்று கொண்டு, ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்ற மகுடவாசகத்தை உருவாக்கி உலகுக்களித்து வான் புகழ்கொண்டது தமிழ்க் கல்வி மரபு. இத்தமிழ்க் கல்வி மரபு தான் ஈழத்தமிழர்கள் மத்தியிலும் தொன்றுதொட்டுத் தொடர்ச்சியாக வளர்ந்துவந்துள்ளது இம்மரபு வளர்ச்சிக்கு ஈழத் தமிழர்களின் பங்களிப்பும் இருந்துள்ளது என்பதற்குச் சான்றுகள் உண்டு. இலங்கையில் அந்நியர் ஆட்சியின்போது இம்மரபு மங்கியிருந்தாலும், மறைந்துவிடவில்லை. ஆறுமுகநாவலர், விபுலானந்த அடிகள் போன்றோர் மூலம் இம்மரபு தொடர்ச்சியும் மறுமலர்ச்சியும் கண்டுள்ளது.

### ஆதிகாலம்

ஈழத்துத் தமிழ்க் கல்வி வளர்ச்சியில் கி. மு. ஆறும் நூற்றாண்டிலிருந்து யாழ்ப்பாணத் தமிழ் வேந்தர்களின் இறுதிக்காலம்வரை ஒரு காலகட்டமாக எடுக்கலாம். தமிழ் வேந்தர் காலம் கி. பி. 1210-1621 வரையாகும், இதற்கு முற்பட்ட காலத்தின் கல்வி வரலாறு ஆராய்ச்சிக்குரியது. எனினும் தமிழ் மரபினைஒத்த கல்வி முறையே இங்கு இருந்திருக்கவேண்டும். நூல்சார்ந்த கல்வியாகவும், தொழில் சார்ந்த கல்வியாகவும் கல்வி அளிக்கப்பட்டது. நூல் சார்ந்த கல்வியில் அரிச்சுவடி, எழுத்து, வாசிப்பு, நீதிவாக்கியங்கள், எண், சைவசமய அடிப்படை இலக்கிய இலக்கணங்கள் என்பன அவ்வத் தரங்களுக்கேற்பக் கற்பிக்கப்பட்டன. இத்தகைய [illegible]

(8-ம் பக்கம் பார்க்க)

கு. சோமசுந்தரம்

(பிரதம கல்வி அதிகாரி)

---

## தெய்வீக வாழ்க்கை

இந்த உலகம் மிக நல்லது இதில் எத்தனை தரமும் பிறக்கலாம். சுத்தமாயிருந்தால் ஒன்றுக்கும் பயப்பட வேண்டியதில்லை. முறையாகச் சீவியம் செய்யலாம். கலியாணம் முடித்துத் தெய்வங்களாக வாழ்ந்து ஒரு பிள்ளை இரண்டு பிள்ளைகளைப் பெற்றுச் சீவியம் நடத்தலாம். அல்லது சிலர் கலியாணமின்றியும் வாழலாம்.

★

ஒவ்வொருவரும் அன்றன்று செய்ய வேண்டியவைகளைக் கிரமமாகச் செய்ய வேண்டும். நாளைக்கு என்ன நடப்பது என்பதுஒருவருக்கும் தெரியாது. அதை அறிய வேண்டுமென்று கவலைப்பட வேண்டியதில்லை, சுத்தமாய்க் குளித்து சுத்த ஆடை உடுத்து, ஒழுங்காகச் சாப்பிட்டு, அந்தி சந்தி கடவுளை வழிபட்டுச் சீவியம் நடத்தினால் கடவுள் காப்பாற்றிவருவார். என்னென்ன செய்ய வேண்டுமென்பதை அவர் எந்நேரமும் சொல்லித் தந்து கொண்டிருப்பார். அவர் எங்களுடனே எப்போதும் இருக்கிறார். அவருக்குத் தெரியாமல் யார் தான் என்ன செய்ய முடியும்.

ஓம் தத் சத் ஓம்.

— யோகசுவாமிகள்

உதவியவர்: க. [illegible]

---

யாழ். நூலகம் எரிந்ததை முன்னிட்டுச் சமீபத்தில் நூலகக் கருத்தரங்குகள் யாழ்ப்பாணத்தில் நடாத்தப்பட்டன. இக்கருத்தரங்குகட்குச் சென்று வந்ததால் எனக்குச் சில சிந்தனைகள் உருவகம் ஆயின அந்தச் சிந்தனையின் சிதறலே இந்தக் கட்டுரை.

பிரித்தானியாவின் பழம் பெரும் கட்டிடக் கலைக்குச் சான்று பகர்வது 'வெஸ்ட் மினிஸ்டர் அபே'

இந்தக் கட்டிடமே மிகப் பெரும் கட்டிடக்கலையின் எடுத்துக்காட்டாக வரலாறு புகழ்கின்றது.

அந்தக் கட்டிடம் கட்டி முடிக்கப்படுவதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே தஞ்சையில் நிழல் விழாத கோபுரத்தைக் கட்டி முடித்தவன் தமிழன். அதனால்— ஆற்றங்கரையினிலே ஆங்கிலேயன் நிர்வாணமாக மீன் பிடித்துக்கொண்டு திரிந்த காலத்திற்கு முன்பே தமிழன் நாகரீக நிலையினை அடையத் தொடங்கிவிட்டான்!

எனது கருத்துக்கள் சரியென்றால், நான் எழுதிய ஏடு ஆற்றிலே எதிரேறட்டும் என்று துணிந்து ஏட்டினைச் செலுத்தியவர் ஞானசம்பந்தன்!

பப்பரஸ் புல்லிலே தூரிகை செய்து மேல்நாட்டவர் எழுதிய அந்தக் காலத்திலே ஏட்டிலே எழுத்தாணி கொண்டு எழுதிப்புதிய வரலாறு படைத்தவன் தமிழன்.

கோலன் பகுப்பு முறையும், ரங்கநாதனும், டூவியும் பிறப்பதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே மூவர் தேவாரங்களை வகைப்படுத்தி, நெறிப்படுத்திய பெருமை நம்பியாண்டார் நம்பிக்கு உண்டு.

கூறியது கூறல், குற்றம் காணல் என்ற நிலையில்லை தீர்ப்புக்கூறிய நக்கீரன் தமிழறிஞன் மாத்திரமல்ல —அவன் ஒரு நூலகன் என்றால் மிகையல்ல!

அறிஞர்க்கு எல்லாம் அறிஞனாக இருக்க வல்லவனே 'நூலகன்' என நான் கருதியதால் நக்கீரனை அந்த இடத்தில் நாம் வைத்தோம் என்று தெளிக!

### தொல்காப்பியத் தொடர்

''நாடக வழக்கிலும், உலகியல் வழக்கிலும்'' ''என்மனார் புலவர்'' ''மொழிப'' எனத் தொல்காப்பியர் குறிப்பிடும் சொற்தொடர்கள் அவரை எமக்கு உசாத்துணை நூலகராகவே எண்ண வைக்கின்றன. தமக்கு முற்பட்ட விசயங்களை நினைவூட்டும் அவரை வேறு எந்த அடைமொழிகொண்டு அழைப்பது?

''பழையன கழிதலும் புதியன புகுதலும்—வழுவில கால வகையினானே'' எனக் குறிப்பிடும் நன்னூலாரை நூலக ஆலோசகராக நாம் தெரிவு செய்யலாம்.

### நூல்களும் தமிழர்களும்

எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும் என வாழ்ந்தவர் நம் முன்னோர்கள்.

அதனால் நூல்களுக்கு அவர்கள் கொடுத்த முக்கியத்துவம் மிக அதிகம். கற்றலில் மக்களுக்கு நாட்டம் இருந்தமையால் கற்றலினால் என்ன பயன் என்பதற்கு விளக்கம்கூற வள்ளுவன் முனைந்தான்!

### ''நூல்'' என்ற ஆட்சி

''திறம் வேறு செய்தியின் நூல் நெறி பிழையாது'' என மருதன் இளநாகனார் பாடினார்.

''ஒரு திறம் சாரா அரைநாள் அமையத்து நூலறி புலவ'' என நக்கீரர் நெடுநெல் வாடையில் பாடியுள்ளார்.

''மூத்தாலும் மூவார் நூல் தேற்றாதார்'' என்று சிறுபஞ்ச மூலம் பாடி நிற்கின்றது ''நவில் தொறும் நூல் நயம்'' என்றான் வள்ளுவன்.

''ஒரு குடியில் மூத்தானைக் கைவிட்டுக் கற்றான் இளமை பாராட்டும் உலகு'' என்று இன்னொரு தமிழ்க் கவிதை புகல்கின்றது. எனவே நூல்களைக் கண்மணிகளாகப் பேணியவர்கள் தமிழ் மக்கள்.

## நூலகவியலின் முன்னோடிகள்

### வகைப்படுத்தலில் முன்னோடியான தமிழர்கள்

நூலகங்களில் நூல்களை வகைப்படுத்தியதில் டூவிக்கே இன்று முதலிடம் உண்டு. 010ல் இருந்து தொடரும் அவரது வகைப்படுத்தல் தசாம்சப் புள்ளிகளை இணைப்பதில் முடிவடைகின்றது. இந்த வகைப்படுத்தலில் டூவிக்கு முன்பு தமிழகத்தில் இருந்த சமணர்கள் நூல்களை வகைப்படுத்திப் புதிய புரட்சியினை உண்டாக்கினர். அவர்களின் வகைப்படுத்தலின் முக்கிய அம்சங்கள்;-

1. உயிர்.
2. பொருள்.
3. இயக்கம்
4. இடம்.
5. காலம்.

உங்களுக்கு இது ஆச்சரியமாகப்படலாம். ஆனால் இந்த வகைப்படுத்தல் உண்மையானது.

### நிலையான வைப்புகள்

நூலகங்களில் சில நூல்களை வெளியிலே எடுத்துச் செல்லுதல் முடியாது. அவை காசு கொடுத்தும் வாங்கமுடியாத நூல்களே. இவ்வாறான நூல்கள் பண்டைய சமண, சைவ, பௌத்த நூலகங்களிலும் இருந்தன. ஆனால் மிகவும் சிறப்பான நாளான ''ஞான பூசை'' என்ற தினத்தில் ஆயிரக்கணக்கில் அச்சிடப்பட்டுக் கல்வியில் ஆர்வம் உள்ளவர்கட்கு இலவசமாக வழங்கப்பட்டன.

எனவே ஞானபூசை என்று அழைக்கப்பட்ட அன்றைய தினம் இன்றைய நூலகங்கட்கும் வழிகாட்டக்கூடியது.

### முகமனுக்கு இடமில்லை

புலவர்களால் அரங்கேற்றப்படும் நூல்களுக்கு மூவேந்தர் காலத்தின் ''சங்கம்'' அரங்கேற்றம் நடாத்தியது.

அங்கு வராத நூல்களே இல்லை. திறனாய்வு செய்வதற்கு நக்கீரன் இருந்தார். ''கொப்பியடித்தல்'' என்ற கலைக்கு அங்கே இடமில்லை. ''நெற்றிக் கண்ணைக் காட்டி

(8ம் பக்கம் பார்க்க)

திக்கபக்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடர் நவீனம்

# இருள் இரவில் அல்ல

★ இணுவையூர்
சிதம்பரதிருச்செந்திநாதன்

மனத்திலே வைராக்கியம் பிறந்துவிட்டால், எதையும் தாங்கும் சக்தி பிறந்துவிடும். மௌனமாக இருந்து எல்லோருடைய சொல்லம்புகளையும் தாங்கிவந்த வசந்தமலரின் உள்ளத்திலும் வேகம் பிறந்தது. மனஉறுதியும் உருவானது.

தங்கலட்சுமி மாமியும், சாரதாவும் ஏனையவர்களும் அவளை விமர்சிக்கும் போதெல்லாம் கண்ணீர் விடுவதையே வழக்கமாகக் கொண்டிருந்த வசந்தமலருக்கு, தற்சமயம் நடந்த நிகழ்ச்சிகள் கண்ணீரை வரவழைக்கவில்லை. உணர்ச்சிகரமான ஒரு கண்ணியத்தை உருவாக்கியது.

தெருவில் போகும் பிச்சைக்காரியையோ அல்லது பைத்தியக்காரியையோ வேண்டுமென்றே சீண்டிவிட்டு வேடிக்கை பார்த்து, அவர்களின் பேச்சைக் கேட்பதில் இன்பம் காணுபவர்கள் தான் நம்மவர்கள்.

ஒரு ஆணுடன் பெண் கதைப்பதையோ அல்லது சேர்ந்து போவதையோ சாட்டாக வைத்து அவள் ஒரு மாதிரி, மூன்று மாதம் கர்ப்பிணி என்று கதைப்பதிலும் சிலருக்கு இனிமை பிறக்கின்றது.

சிலருக்குத் தமது மனத்தின் அந்தரங்க ஆசைகளை அவற்றைச் செயற்படுத்த முடியாத நிலையிலே, கற்பனையில் சுகம் காணுவதற்காகக் கண்டபடி கதைத்துத் தமது அந்தரங்க ஆசைகளைக் கற்பனையிலே பூர்த்தி செய்வதோடு மாத்திரமல்லாது மற்றவர்களின் வேதனைகளையும் தூண்டிவிட்டு வேடிக்கை பார்ப்பதில் தனி இன்பம்.

திண்ணைகளிலும், சந்தைகளிலும், கோயில்களிலும் கூடுகின்ற பெண்களில் அநேகம் பேருக்குத் தங்களைவிட மற்றவர்கள் அழகாக இருப்பதோ அல்லது அலங்காரம் செய்வதோ பிடிக்காது. அதற்கு ஆயிரம் அர்த்தங்கள் கூறுவதில் அவர்கள் தனித்தன்மை உள்ளவர்கள்.

''எங்களுக்குத் தெரியாத நாசரீகமே.''

''எத்தனை நாட்களுக்கு இந்த ஆட்டம்''

''உதுக்கெல்லாம் என்ன வழி என்று எங்களுக்குத் தெரியாதோ''

''வயது போகப் போக இப்பதான் அவளுக்கு இளமை பிறக்குது'' என்று பலவிதமாகப் பேசுகின்ற பெண்களில் எத்தனை பேர் தாங்கள் பேசுகின்ற பேச்சால் யாருக்கு என்ன பலன் கிடைக்கும் என்பதை உணருவார்கள்.

இப்படியான குளறுபடி நிறைந்த சமூகத்தில் பிறந்துவிட்ட வசந்தமலருக்கு செல்லம்மாவின் வருகையினாலும் அவளது பேச்சினாலும் புகயவலு பெற்றதில் ஆச்சரியமில்லை.

செல்லம்மா பொன்னம்பலத்துக்காகத் தூது வந்தபோது தான் விரிக்கும் வலையில் வசந்தமலர் விழுவாள் என்று பூரணமாக நம்பியிருந்தாள்.

ஆனால் நினைத்த காரியம் சரிவராதது மாத்திரமல்லாது தன்னையும் வசந்தமலர் பேசியதாலும் ஆத்திரம் கொண்ட செல்லம்மா தான் வந்த காரணத்தையே தலைகீழாக மாற்றி வசந்தமலரின் மேல் வீண்பழியைச் சுமத்தினாள். யாரோ ஒரு தடியனுடன் வசந்தமலர் தொடர்பு வைத்திருக்கின்றாள் என்று கூறிச் சென்றுவிட்டாள்.

அவள் செய்த வீண்வேலையே வசந்தமலருக்குப்புத்துணர்ச்சியைக் கொடுத்தது. தன்னை நடத்தை கெட்டவளாக்க முனைகின்ற ஏனையவர்களுக்கு ஈடுகொடுக்க அவள் தயாரானாள் ''உனக்குச் செய்து காட்டுகிறேன்'' என்று சொல்லி சாரதா போனபின்னரும் வெகு நேரம்வரை வசந்தமலர் உணர்ச்சிகரமாக நின்றுகொண்டிருந்தாள்.

சற்று நேரத்துக்கெல்லாம் தங்கலட்சுமியும் சாரதாவும் அவள் இருந்த இடத்துக்கு வந்தார்கள். ''என்னடி ஏதோ செய்யிறதையும் செய்து போட்டுக் கனக்கக் கதைக்கிறாய். என்ரை பிள்ளையளின்ரை தகுதி உனக்கு இருக்குதா? அதுகளின்ரை வடிவும் நாகரீகமும் உனக்கு வருமே? அதுகள் எப்பிடி இருந்தாலும் உனக்கென்ன? என்ரை பிள்ளையள் ஒருத்தரையும் தேடிப்போகவில்லை. அவன்களாகத் தேடி வாறான்கள். அது தெரியுமே உனக்கு. உன்னைப்போல கண்டவனுக்கும் பல்லைக் காட்டுறமாதிரி நினைச்சுக்கொண்டியோ. தன்னையும் ஒரு பிள்ளையையும் கொண்டு நடத்க முடியாமல் இருக்கு. அப்படியிருக்க உனக்குக் கலியாண ஆசை வேறை வந்திட்டுதே! வெட்கம் ரோஷம் இருந்தால் உப்பிடி நடப்பியே.'' என்று பொழிந்து தள்ளினாள் தங்கலட்சுமி

''மாமி எதையும் வடிவாய் அறிந்து கதையுங்கோ. சும்மா எல்லோரும் கதைக்கினம் என்றதற்கு கண்டபடி கதையாதேங்கோ. நானும் ஒரு பொம்பிளைதான். ஒருபொம்பிளைக்கு இருக்கவேண்டிய எல்லாக் குணங்களும் எனக்கு இருக்குது. மானம் மரியாதையோடை வாழத்தான் எனக்கு விருப்பம் என்று பதில் சொன்னாள் வசந்தமலர். தங்கலட்சுமிக்கு புதுமையாக இருந்தது. இவ்வளவு நாளும் பேசாமல் இருந்த வசந்தமலர் இன்றைக்கு இப்படி பேசுகின்றாளே! எப்படி இவ்வளவு சீக்கிரம் மாறினாள்.

''நீ உப்பிடி கதைக்கக்கூட முன்னேறிவிட்டாயே? பத்தினிப் பெண்ணுக வேஷம் போட்டதெல்லாம் கொஞ்ச நாட்தான். இப்ப பேச்சுக்கலை மாத்திரமல்ல எல்லாக்கலைகளிலும் முன்னேறிவிட்டாய் அப்பிடித்தானே'' என தங்கலட்சுமிமாமி கேடடாள்.

''மாமி நான் கனக்க கதைக்க விரும்பவில்லை. மருண்டவன் கண்களுக்கு இருண்டதெல்லாம் பேய். சந்தேகம் உள்ள உங்களுக்கு எல்லாமே சந்தேகமாகத்தான் தெரியும். ஆனால் என்ன நடக்கப் போகிறது என்பதை பொறுத்திருந்து பாருங்கள்'' என்று சொன்னாள்.

★

உடலில் பிறந்துவிட்ட உறுதியுடன் வீட்டைவிட்டு வெளியேறிய கந்தையர் விரைவாக நடந்தார் இப்படியான இழிவான வாழ்க்கை வாழ்வதைவிட செத்துப்போவது எவ்வளவோ மேல் என்று அவர் நினைத்தார்.

ஒரு நேரம் கஞ்சியைக்குடித்தாலும் பரவாயில்லை. அன்பாக அமைதியாக அவர் வாழ விரும்பினார். ஆனால் அவர் நினைத்த எதுவுமே அவருக்கு சரியாக அமையவில்லை.

வாழ்க்கையில் வசதியாக வாழ்ந்து, பிள்ளைகளைச் சிறப்பாக வளர்த்து நல்ல நிலைக்குக் கொண்டு வந்த கந்தையருக்கு இப்படியான ஒருநிலை ஏற்படும் என்று அவர் கனவிலுங் கூட நினைக்கவில்லை.

அவள் புண்ணியவதி இத்தகைய பிரச்னைகளைச் சிறிது காலம் அனுபவித்துவிட்டுப் போய்ச் சேர்ந்துவிட்டாள் என்று நினைத்தார். அவர் நிலையோ இன்று;

மருமகளால் 'நேரகாலத்துக்கு போய்ச் சேரத் தெரியாதோ' என்று கேட்குமளவுக்கு வந்துவிட்டது.

வாழ்க்கையில் எந்த விடயமும் சிறப்பாக நடக்கப் புண்ணியம் செய்யவேண்டுமெனச் சிலர் சொல்லுவதைக் கந்தையர் உணர்ந்து கொண்டுவிட்டார்.

இனிமேல் மகன் வீட்டுப்பக்கம் போகக்கூடாது. தீவிரமாக யோசித்துத் தனது இறுதிக் காலத்தைச் சுலடமாக முடித்துக்கொள்ள வழிபார்க்க வேண்டும் என நினைத்தவராக முருகன் கோயிலடிக்கு வந்தார்.

கோயிலடிக்குப் பின்னால் பற்றைகள் நிறைந்த ஒரு காணி இருக்கிறது. அந்தக்காணியின் ஓரமாக ஒரு பாழடைந்த கிணறும் கிணற்றின் பக்கமாக பழுதான நிலையில் உள்ள ஒரு தகரக் கொட்டகையும் இருக்கிறது. மாலைநேரமாகையால் வெயிலின் அகோரம் அப்போது இருக்கவில்லை. கந்தையர் நடந்துவந்து கிணற்றுக்கட்டில் தலையைச் சாய்த்தவாறு தரையில் அமர்ந்தார்.

விடிவதற்குள் இந்தக் கிணற்றில் தன் பிரேதம் மிதக்க வேண்டும் என்று தீர்க்கமாக முடிவு செய்தார்.

★

பொழுது மங்குகின்ற நேரம் பொன்னம்பலம் யாருக்காகவோ அந்த இடத்தில் காத்திருந்தார்.

அவர் எதிர்பார்த்துக் கொண்டிருந்த செல்லம்மா விரைவாக நடந்து வருவது சற்றுத் தூரத்தில் தெரிந்தது.

''அவள் சரியான மாய்மாலக்காரி'' என்று சொல்லிக்கொண்டு செல்லம்மா வந்தாள்.

பொன்னம்பலத்தின் முகம் மரத்துப் போயிருந்தது.

''என்ன செல்லம்மா'' என அவர் கேட்டார்.

''அவளுக்கு நல்ல காலம் இல்லை''

''அவள் என்னவாம்', என்று நெஞ்சம் படபடவென்று அடிக்க அவர் கேட்டார்.

## 15

''அவள் மாட்டன் என்று சொல்லிப்போட்டாள்''

''ஏன்?''

''ஆருக்குத் தெரியும் நான் அதைப் பற்றிக் கதைக்கவே சண்டைக்கு வந்திட்டாள்:''

பொன்னம்பலத்தின் முகம் கறுத்து மனம் விறைத்தது. கொஞ்சக்காலமாக வசந்தமலரைக் காணும்போது அவருக்கு உடல் புல்லரிக்கும், உள்ளம் மெய்மறந்து போகும்.

உடலும் உள்ளமும் இவ்வாறு ஆர்ப்பரிக்கும்போதெல்லாம் அவர் சுயநினைவை இழந்துவிடவில்லை. எதற்கெடுத்தாலும் சினந்துவிழும் புவனசுந்தரியிடம் இல்லாத ஏதோ ஒரு மாயம் வசந்தமலரிடம் இருப்பதாக அவர் எண்ணினார். அவளின் இளமையும் அந்த இளமையின் வாளிப்பான உடல் வளர்ச்சியும், அவளின் அடக்கமும் பொன்னம்பலத்தைச் சித்திரவதை செய்துகொண்டிருந்தன.

கட்டிய கணவனோடு வாழ்கின்ற வசந்தமலரை நினைப்பதோடு மாத்திரம் அவர் நிறுத்தியிருந்தார்.

ஆனால்

இருந்தாற்போல் கந்தமூர்த்தி காலமானது பொன்னம்பலத்தின் நினைவுகளுக்கு உத்வேகம் கொடுத்தது.

எதிர்விளைவுகளை எதிர்பார்க்காமல் உணர்வுகளையும் உணர்ச்சிகளையும் வளர்த்து வந்த பொன்னம்பலம் வசந்தமலரிடம் தனியிடம் பிடிக்க விரும்பினார், செத்தவீட்டுச் செலவுக்குப் பணம் கொடுத்துத் தனது நடவடிக்கையை ஆரம்பித்த அவரால் மேற்கொண்டு செயற்பட முடியவில்லை. காரணம் புவனசுந்தரி.

(8-ம் பக்கம் பார்க்க)


## மணமும் வாழ்வும்

என்ன அழகு கொட்டிக் கிடக்கும்
இனிய மலர்கள் ஆயிரம் கோடி
வண்ண வடிவும் மணமும் சேர்ந்தே
வளரும் நிறமும் குணமும் போந்து
எண்ண இனிய இயற்கை எழிலில்
கண்ணைக் கவர்ந்தே கருத்தை மயக்கும்
பெண்ணின் அழகாய்ப் பிலிற்றும் தேனை
அள்ளிக் கொட்டி அலர்ந்து மலரும்

மலரும் பூக்கள் மருங்கில் சொட்டும்
தேனை உண்ணத் தேனீ நாடும்
படரும் விரும்பும் நறிய தேனை
மலர்கள் தோறும் அள்ளிச் செல்லும்
செல்லும் தும்பி சேக்கை நண்ணி
சிறந்த தேனைச் சிதையா தேந்தி
கூட்டில் சேர்த்து குலவி மகிழும்
கொள்ளை இன்பம் கண்டு பாடும்

இயற்கை அன்னை அளித்த மலரில்
செயற்கை ஊறு எதுவுமின்றி
தேனை வாரும் தேனீ போன்றே
எவர்க்கு மிதமாய் வாழும் மனிதர்
காற்றில் செல்லும மணத்தை வென்றே
சுவர்க்க மென்ன உலகை ஆக்கி
சேற்றில் அலரும் மலர்கள் போன்று
திசைகள் எங்கும் செறிந்து நிற்பர்.

— முருகவே. பரமநாதன்



## நாடோடிக் கதைகள்

தமிழில்: நீர்வை பொன்னையன்

### சூழ்ச்சி

ஒரு மனிதனுடைய வளவிற்குள பட்டுப்போனமரம் ஒன்று நின்றது.

''பட்டமரம் வைத்திருப்பவர்களைத் துரதிர்ஷ்டம் பீடிக்கும்.''

அயலிலுள்ள ஒரு முதியவர் கூறினார்.

மரத்திற்குரியவன் அதை உடனே வெட்டி வீழ்த்தினான். அப்பொழுது அந்த அயலவன் எரிப்பதற்குச் சில மரத்துண்டுகளைக் கேட்டாள்.

''முதியவருக்கு எரிப்பதற்கு விறகு தேவைப்பட்டது. அதற்காகத்தான் அவர் மரத்தை வெட்டும்படி எனக்குக் கூறினார். நாம் இருவரும் அயலவர்கள். அப்படியிருந்தும் அவர் இந்த வழியில் என்னை ஏமாற்றியிருக்கின்றார். இது உண்மையில் பெரும் மோசடியான செயல்''

மரச் சொந்தக்காரன் வெறுப்புடன் தனக்குள் கூறிக் கொண்டான்.

### நம்பிக்கை

ஒரு மனிதனுக்குச் சப்பாத்துத் தேவைப்பட்டது. ஒரு சோடி புதிய சப்பாத்துக்களை வாங்குவதற்கு அவன் தீர்மானித்தான்.

அவன் தனது கால் பாதங்களின் அளவை எடுத்தான் அதை மறந்துபோய் தனது ஆசனத்தில் வைத்துவிட்டுச் சந்தைக்குப் புறப்பட்டான்.

அவன் சப்பாத்துச் செய்பவனிடம் சென்றான். அப்பொழுதுதான் அளவு பற்றிய எண்ணம் அவனுக்கு வந்தது

''அட நான் அளவைக் கொண்டுவர மறந்துவிட்டேன்!'' அவன் திகைத்துப் போய்க் குளறினான்.

அளவை எடுத்துவருவதற்கு தனது வீட்டுக்கு விரைந்து சென்றான்.

அவன் திரும்பிச் சந்தைக்கு வந்தபொழுது கடைகள் எல்லாம் மூடப்பட்டுவிட்டன. ஆகவே அவனால் தனக்கு வேண்டிய சப்பாத்துக்களை வாங்கமுடியவில்லை.

''நீ ஏன் சப்பாத்தைக் காலில் அணிந்து பார்த்து வாங்கவில்லை?''

அவனது அயலவர்களில் ஒருவர் அவனைக் கேட்டார்.

''அளவுகோலில் தான் எனக்கு அதிக நம்பிக்கை.''

(8 ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூலகவியலின்

(6ம் பக்கத் தொடர்ச்சி)

ணுலும் அங்கு குற்றம் குற்றமே.''

### நூல்களைத் தெரிவு செய்தல்

நாட்டுக்கு நல்லன பயிற்றும் நூல்களே நூலகச் சேர்க்கை' இந்தச் சேர்க்கையைத் தெரிந்து எடுப்பதில் தமிழறிஞர்கள் சளைத்தவர் அல்ல!

தொப்பி இருக்கவேண்டிய இடமும், செருப்பு இருக்க வேண்டிய இடமும் அவன் அறிந்த ஒன்றே.

ஒரு நூல் எப்படி இருக்க வேண்டும் என நாம் இன்று யோசிக்கிறோம். அந்நூல் ''நுண் விழைந்த நூல்'' ஆக இருக்கவேண்டும் எனத் திரிகடுகம் பாடுகின்றது.

''போற்றும் புலவரும்
வேறே பொருள் தெரிந்து
தேற்றும் புலவரும் வேறே''

என நாலடியார் செப்புகின்றது.

''நூல் முறையாளர் துணிவு'' என ஒரு அடி ஆசாரக்கோவையில் உண்டு. இவை எல்லாம் எம்மை ஆச்சரியத்தில் ஆழ்த்துகின்றன.

### நடமாடும் நூலகத்தின் முன்னோடிகள்

நடமாடும் நூலகங்கள் (Mobile Library) தமிழர்கட்குப் புதியவை அன்று.

1931-ம் ஆண்டிலே தமிழ் நாட்டிலே கனகசபைப்பிள்ளை என்ற என்ஜினியர் மாட்டு வண்டியிலே நடமாடும் நூலகம் ஒன்றினைத் தொடங்கினார்.

அதே ஆண்டில் தென்னாற்காடு மாவட்டத்தில் இப்பணி மிதிவண்டியில் தொடங்கப்பட்டது.

1936-ம் ஆண்டிலே மதுரையில் வசித்த பாலசுப்பிரமணிய ஐயர் இந்தப் பணியை இரட்டை மாட்டு வண்டியில் தொடங்கி நடாத்தினார். எனவே நடமாடும் நூலகம் தமிழர்கட்குப் புதிது அன்று.

### யாழ். நகரம் பின்பற்றுமா?

நடமாடும் நூலகம் நடாத்த யாழ். மாநகரசபை திட்டம் தீட்டியிருப்பதாக நாம் அறிகின்றோம். காலம் நேரம் அறிந்தே இப்பணியை நாம் தொடங்குவது நல்லது.

பல கிராமங்கள் சந்திக்கும் பாதுகாப்பான இடம் ஒன்றில் இந்த நடமாடும் நூல் நிலையத்தைத் தற்சமயம் அமைத்தால் என்ன? சம்பந்தப்பட்டோருக்கு இது சமர்ப்பணம்.

# முப்பத்தாறு ஆண்டுகள் முத்தான சேவை



ஓய்வு பெறும் அதிபர் செல்வி பத்மாவதி இராமநாதன்

முப்பத்தாறு ஆண்டுகள் கல்விப் பணிப் பரப்பில் முத்தாய்ச் சுடர்விட்ட ஆசிரியையாய், அதிபராய் அரும்பணியாற்றிய பாரதியின் புதுமைப் பெண்ணுக்கு இலச்கணமாய் நேரிய பார்வையும், நிமிர்ந்த நடையும், சீரிய மாட்சியும் சிறந்த ஆளுமையுங்கொண்ட செல்வி பத்மாவதி இராமநாதன் அவர்கள் தமது சேவையிலிருந்து ஓய்வு பெறுகின்றார்.

கொட்டில்களாக இருந்த எமது கல்லூரிக்கு ஒரு நல்ல பிரார்த்தனை மண்டபம் கட்டுவதற்காக 1954ல் ஒரு சிறப்பான களியாட்டுவிழா நடாத்தப்பட்டது. அக்களியாட்டு விழாவிற்கு செல்வி ப. இராமநாதனே நிதியாளர் பதவிக்குத் தெரிந்தெடுக்கப்பட்டார். அப்பொழுது இவர் இரவு பகலாக அயராது ஆற்றிய சேவை பலரின் பாராட்டைப் பெற்றது.

அபிவிருத்திச்சங்கத்தின் உதவியுடன் ஒரு சிறந்த நிர்வாகக் காரியாலயத்தையும், 12 வகுப்பறைகளைக் கொண்ட இரு மாடிக்கட்டிடங்களையும், நான்கு தரமான விஞ்ஞான ஆய்வு கூடங்களையும் கட்டி முடித்தார். பிரார்த்தனை மண்டபமும் ஒன்றரை இலட்சம் ரூபா செலவில் புதுப் பொலிவு பெற்று, சங்கீத நடன, நாடக நிகழ்ச்சி நடைபெறுவதற்கான சிறந்த அரங்கையுடையதாகப் புதுப்பிக்கப் பட்டது.

இக்கல்லூரியின் பழைய மாணவிகள் சங்கம், பெற்றோர் ஆசிரிய சங்கம் ஆகியவற்றுடன் நல்ல பிணைப்பை ஏற்படுத்தி அவற்றின் நன்மதிப்பையும் பெற்றதால் இக்கல்லூரியின் விநாயகர் ஆலயம் பழைய மாணவிகளின் உதவியால் இவரால் புதுமெருகு பெற்றுள்ளது.

எமது அதிபர் கல்லூரியின் கட்டுப்பாட்டையும் ஒழுங்கையும், நிலைநாட்டுவதில் மிகவும் கண்டிப்பானவர்.

நேரம் பிந்தாமைக்கும், சுத்தத்திற்கும் எடுத்துக்காட்டாக விளங்குமிவர் மாணவிகளுக்கும் ஆசிரியைகளுக்கும் ஒரு முன்னோடியாகவும், நல்லவழி காட்டியாகவும் திகழ்ந்தார்.

விவேகமான ஏழை மாணவிகளின் கல்வியின் முன்னேற்றத்தில் மிக அக்கறையுடையவர். எல்லா மாணவிகளின வர். விடுதிச்சாலை மாணவிகள் இவரின் செல்லப்பிள்ளைகள். நாட்டில் அரசியல்நிலை சீர்குலைந்து குழப்பங்களும், பதற்றமும் ஏற்பட்டுள்ள இக்கால கட்டத்தில் மாணவிகளின் பாதுகாப்பிலும், விடுதிச்சாலை மாணவிகளின் உணவுப் பிரச்னையிலும் எப்பொழுதும் விழிப்பாக இருப்பவர்.

வெறும் ஏட்டுக்கல்வி மாணவிகளை முழு மனிதர்களாக்காது என்ற ஆழ்ந்த கருத்துடைய இவர் மாணவிகளை விளையாட்டுத்துறையிலும் மற்றும் வெளிக்கள வேலைகளிலும் தொழில் முன்னிலைப் பாடங்களைக் கற்பதிலும் ஈடுபடும்படி ஊக்குவிப்பார். இவரின் காலத்தில் மாணவிகளுக்கு ஆடற் சேவயாட்டம், கூடைப் பந்தாட்டம், வலைகோல் ஆட்டம் முதலிய விளையாட்டுக்கள் அறிமுகம் செய்யப்பட்டன. எமது கல்லூரி மாணவிகள் யாழ் பெண்கள் பாடசாலைகளுக்கான விளையாட்டுப் போட்டியிலும், அகில இலங்கை ரீதியான விளையாட்டுப் போட்டியிலும் பங்குபற்றி அரிய சாதனைகளை ஏற்படுத்தினர். பாடசாலையில் ''பாண்ட் வாத்தியக் கோஷ்டி'' ஆரம்பிக்கப்பட்டது, புதிய ஆக்க முறையில் நாடகங்கள், நாட்டார்பாடல்கள் மேடையேற்றப்பட்டன. இளைஞர் ஆண்டையொட்டி நூல்வள நிலையத்தின் ஆதரவுடன் ''குழந்தைக்க விதைகள்'' நூல் வெளியிடப்பட்டது? அண்மையில் இவரது ஊக்கத்தால் இடம்பெற்ற இந்து நாகரிகக் கண்காட்சி பலரின் பாராட்டைப் பெற்றது. 1984ல் நடாத்தப்பட்ட ஆங்கில தினப் போட்டியில் எம்மாணவிகளின் திறமை ஆங்கிலப் பிரிவினால் அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட பாராட்டுதலிலிருந்து யாவர்க்கும் துலக்கமானது.



விஞ்ஞான கூடம்

இவரின் கட்டுப்பாட்டில் பாடசாலை ஒரு குடும்பமாக ஒரு பிரச்னையுமின்றித் துரிதமாக முன்னேறி ஒரு தசாப்தத்திலே தரமான வளர்ச்சியயடைந்தது. எந்தப் பிரச்னையையும் பதற்றமின்றி மிகச் சாதுர்யமாகச் சமாளிக்கும் ஆற்றலே இவரின் சாதனைக்குக் காரணமாக இருந்தது எனலாம்.

எம் அன்பும், அறிவும் பண்பும் கொண்ட அதிபரின் காலம் பொற்காலமாகும்.

செல்வி பத்மாமதி அவர்கள் பதவியிலிருந்து ஓய்வு பெற்றாரன்றிச் சேவையிலிருந்து ஓய்வு பெற்றாரில்லை என்றே நம்புவோம்.

## செல்வி ந. குழந்தைவேலு

செயலர், ஆசிரிய மன்றம், யாழ். இந்துமகளிர் கல்லூரி

தன்னலமற்ற சேவையின் மூலம் 1958ல் முதலாம்தர விசேஷ ஆசிரியப்பதவியையும், 1967ல் உபஅதிபர் பதவியையும், 1975ல் அதிபர் பதவியையும் இவர் பெற்றார்.

எடுத்த கருமம் எதையும் துணிவுடன் கண்துஞ்சாது செய்துமுடிக்கும் திறமையைக் கொடையாகவுடையஇவருக்கு அதிபர் பதவி கிடைத்ததும் யாழ் இந்து மகளிர் கல்லூரியை முதற்கரமான பாடசாலையாக்கச் செயற்பட்டார். அதில் தன் வாழ்நாளிலேயே வெற்றியையும் கண்டார்.

பாடசாலையின் உயர்ச்சியிலேயே கண்ணும் கருத்துமாக இருந்த அதிபர் பாடசாலையின் தும், பழைய மாணவிகளின தும் ஆசிரியைகளின தம் பெயர்களையும் குடும்ப விபரங்களையும் நினைவில் வைத்திருக்கும் வியத்தகு ஞாபக சக்தியுடைய

## தொடர் நவீனம்

[7ம் பக்கத் தொடர்ச்சி]

பிறகு ரவுணிலே வீடு எடுத்துத் தருகிறன் என்று மறைமுகமாக வசந்தமலரிடம் கேட்டபோது அவருக்குத் தகுந்த பதிலடி கொடுத்து வசந்தமலர் திருப்பி அனுப்பினாலும் அவருக்கு வசந்தமலரின்மேல் இருந்த வெறி தீவிரமாக மாறியது.

எந்தநேரமும் அவருக்கு வசந்தமலரின் நினைவாக இருந்தது. பணவசதியுள்ள தன்னால் வசந்தமலரைச் சுலபமாகத் தன்வசம் இழுத்துவிடலாம் என்று ஓரளவு அவர் நம்பினார்,

வால் அறுந்த பட்டமாக இருக்கும் அவளை இதமாகப் பேசித் தன்பக்கம் அழைக்க அவர் செல்லம்மாவின் உதவியை நாடினார்.

இப்படிப் பலபேருக்கு உதவி செய்து அனுபவப்பட்ட செல்லம்மா தான் சுலபமாக வசந்தமலரைச் சம்மதிக்கச் செய்கிறேன் என்று உற்சாகமாக வசந்தமலரிடம் போனாள். ஆனால் எதுவுமே சரிவரவில்லை.

''அவள் கேட்கிறாள் நீங்கள் செத்தவீட்டுச் செலவுக்காக வேண்டிய தாலிக்கொடியைத் தன்ரை கழுத்தில கட்டுறதென்றால், தான் ஓமோம்'' என்று செல்லம்மா சொன்னாள்.

''உண்மையாகவோ அது எப்பிடி முடியும்'' என்று பதிலுக்குப் பொன்னம்பலம் கேட்க.

''உமக்கு, என்ன விசரே, அவள் அப்பிடி உண்மையாகவே கேட்டவள் அந்தக் காரியம் உம்மால முடியுமே. அதுவும் பகிரங்கமாக அவளை கலியாணம் செய்ய உம்மாலை முடியுமே, அவள் சரியான ஆணவக்காரி'',

''அப்ப சரிவராதே.''

''கடைசிவரைக்கும் சரிவராது அதாலதான் நான் அவளுக்கு நல்ல வேலை செய்து போட்டு வந்திருக்கிறன். பிறகு பார்ப்பம் நான் வாறன்'' என்று சொல்லிவிட்டுச் செல்லம்மா வந்தமாதிரியே போய் சேர்ந்துவிட்டாள்.

பொன்னம்பலமும் நடையைக் கட்டினார். தகரக் கொட்டகைக்குள் இருந்து இதுவரை நேரமும் அவர்கள் கதைத்த கதைகளைக் கிணற்றின் பக்கமாக இருந்த கந்தையா உன்னிப்பாகக் கேட்டார்.

[தொடரும்]

## ஆரம்பக் கல்வி

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

கல்வியின்பின், வசதியும், ஓய்வும், புலமைநாட்டமும் இருப்பின் அவர்கள் தொடர்ந்து மேனிலைக் கல்வியைப் பெற முடியும். பெரும்பாலானோர் தத்தம் தொழில்களில் ஈடுபட வேண்டி, ஆரம்பக் கல்வியுடன் தமது கல்வியை முடித்துக்கொண்டனர்.

மக்கள் தமது வாழ்க்கையைச் செம்மையாக நடாத்துவதற்கும்; சமூகத்தில அறம், ஒழுங்கு, நீதி என்பவற்றைக் கடைப்பிடித்து ஒழுகுவதற்கும்; சைவசமய அனுட்டானங்களை அநுசரிப்பதற்கும் சமுதாயக் கட்டுக்கோப்புகளை மதிப்பதற்கும்; பண்பாட்டு வளர்ச்சிக்கும் இக்காலத்து ஆரம்பக் கல்வி அவர்களுக்கு உதவியது.

பள்ளிக்கூடங்கள், வகுப்பறைகள் என்று புராதன காலத்தில் இருந்திருக்கமுடியாது. ஆசிரியர்கள் தத்தம் இல்லங்களில் மாணுக்கர்களுக்குக் கல்வியளித்தனர். இவை கல்வி பண்பாட்டு மையங்களாக விளங்கின. கற்றல் என்பது ஆசிரியர் வாய்மொழி மூலம் பேச்சு நிகழ்த்த, மாணுக்கர் அதைச் செவி வாயாக, நெஞ்சு களனக் கேட்டுப் பதித்து அறிவைப் பெற்றுக் கொள்ளலாகவே இருந்தது. கூர்மையான எழுத்தாணி கொண்டு பனையோலையில் எழுதும் கலையும் கற்பிக்கப்பட்டது.

தொழில் சார்ந்த கல்வி குலவித்தையாகவே கற்பிக்கப்பட்டது எனலாம். தந்தை தமக்குத் தெரிந்த தொழிலை மைந்தனுக்குக் கற்பிப்பதாகவே இக்கல்வி அமைந்தது. குறிப்பிட்ட ஆற்றலைப் பெறுக்கொள்ளவே இத்தகைய கல்வியின் நோக்கம்.

தமிழ்மக்கட் சமுதாய அமைப்பு மேலும் சிக்கலான படிமுறை வளர்ச்சியயடைந்தபோது கல்வி முறைகளிலும் மாற்றங்கள் ஏற்பட்டன சமூக மாற்றத்தின் தன்மைகளுக்கேற்ப, அதன் இலக்குகளை எய்துவதற்கு ஏற்ற வகையில் கல்வியும் சக்திமிக்க சாதனமாகப் பயன்படுத்தப்பட்டது. நிலப்பிரபுத்துவ சமுதாய அமைப்பிலும், அரசு இடம்பெற்ற காலத்திலும். சமுதாய அமைப்புக்களைப் பேணும் வகையிலும் தேவைகளை நிறைவு செய்யும் முறையிலும் கல்வி அமைந்தது இத்தகைய காலகட்டங்களில், ஈழத் தமிழர் சமுதாயம் பிரதானமாகக் குலமுறை தழுவிய ஒரு விவசாய சமுதாயமாகவேவிளங்கியது, வேளாள குலத்தவர்கள் நிலங்களுக்கு உரிமையாளர்களாகவிருந்து வேளாண்மையில் ஈடுபட, அவர்களுக்கு உதவியாகப் பஞ்சகம்மாளர்களும் மற்றும் தொழிலாளர்களும் இருந்தனர். கமத்தொழிலுக்குவேண்டிய கருவி உபகரணங்களை ஆக்கல், கட்டட அமைப்பு, ஆபரண வேலைகள், உலோக வேலைகள், தச்சுவேலைகள், நெசவு, வனைதல் போன்ற தொழில்களைச் செய்வதிலும், கூலித் தொழில்களிலும் இவர்கள் ஈடுபடுத்தப்பட்டனர். இக்கலைகளும், கைப்பணிகளும் பரம்பரையாகப் பயிற்றுவிக்கப்பட்டு வந்தன. குறிப்பிட்ட தொழிலைச் செய்பவர்கள் ஒரு குலமாகக் கொள்ளப்பட்டனர். தத்தம் குலத்தவர்களைத்தவிர ஏனையோருக்குத் தமது தொழில் நுணுக்கங்களைக் கற்பிக்கமாட்டார்கள். வேறு குலத்தொழிலைக் கற்கவும் மாட்டார்கள். இந்த வகையிலேயே தொழிற்-கல்வி அமைந்திருந்தது.

[இன்னும் வரும்]

## எறும்பு அணிவகுப்பின் இரகசியம்!

ஆறறிவு படைத்த மனிதரிடம் இல்லாத ஒழுங்குமுறை சில பிராணிகளிடமிருப்பதற்கு எறும்பு ஓர் உதாரணம்.

எறும்புகளினது இந்த கோடிமுத்தாற் போன்ற அணிவகுப்புக்கு காரணம் என்ன? ஒரு எறும்பு எங்காவது உணவைக் கண்டவுடன் அதனை மற்றைய 'தோழர்'களுக்கு அறிவிக்கத் தனது புற்றுக்கு ஓடுகிறது, இவ்வாறு ஓடும்போது அதிலுள்ள தனது விசேஷ கரப்பி மூலம் மணம் வீசும் திரவத்தை உமிழ்ந்து கொண்டே எறும்பு செல்கின்றது இந்த உமிழ் திரவச் சுவட்டினைப் பின்பற்றி அந்த எறும்பின் பின்னால் அதனது 'தோழர்கள்' அணிவகுத்துச்செல்கின்றன.

## நாடோடிக் கதைகள்

[7-ம் பக்கத் தொடர்ச்சி]

அவன் கூறினான்.

அவனது பதிலை அயலவர்களால் புரிந்துகொள்ள முடியவில்லை.

அவனுக்கு?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுகாதார சேவைகள் பிராந்திய
பணிப்பாளர் பணிமனை யாழ்ப்பாணம்

## அரசாங்க மத்திய மருந்தகம்

## கட்டிடவேலை

1986-ம் ஆண்டு யூலை 18-ம் திகதி காலை 10-00 மணிவரை சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர் அவர்களால் கீழே குறிப்பிட்ட கட்டிட்வேலைக்கு ரூபா 300,000/- மேற்பட்ட தொகைக்கு பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரரிடம் இருந்து சீல் வைத்த கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்

2. யூலை மாதம் 21-ம் திகதியன்று 10-30 மணி அளவில் கேள்விகள் திறக்கப்படும். அத்தருணம் ஒப்பந்தக்காரரோ அல்லது அவரது பிரதிநிதிகளோ சமுகம் அளிக்கலாம் இவ்வேலை செய்ய விரும்புவோர் எவரும் அரச கருமவேலை ஒப்பந்தக்காராகவோ அல்லது உள்ளூராட்சி உதவி ஆணையாளரினல் அல்லது கூட்டுறவு ஆணையாளரினல் அங்கீகரிக்கப்பட்டவராக இருத்தல் வேண்டும்.

இவ்வேலை செய்வதற்கு விரும்புவோர் 1986-ம் ஆண்டு யூலை மாதம் 17-ம் திகதி நண்பகல் 12 00 மணிவரை சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளரிடமிருந்து கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

திரும்பப்பெறக்கூடிய வைப்புப்பணமாக ரூபா 250/- உம் திரும்பப் பெறமுடியாத பணமாக ரூபா25/-ம் செலுத்தி கேள்விப்பத்திரங்களை பெற்றுக் கொள்ளலாம்,

| வேலை இலக்கம் | நிலையத்தின் பெயர் | வேலையின் விபரம் |
|---|---|---|
| 1. | ஏழாலை மத்திய மருந்தகம் | புதிய மத்திய மருந்தகம் கட்டுதல் |

கேள்விகள் இணைப்பிரதியில் தயாரிக்கப்பட்டபின் கடித உறையில் அடைக்கப்பட்டு மெழுகு சீல் வைப்பதுடன் கடித உறை இடது பக்க மூலையில் ''சுகாதாரப் பகுதி கட்டிடவேலை — ஏழாலை'' என்று குறிப்பிட்டு மேற்கூறிய திகதிக்கு முன் இப்பணிமனையில் கிடைக்கத்தக்கதாக அனுப்பி வைக்க வேண்டும். அல்லது இப்பணிமனையில் வைக்கப் பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் போடப்படவேண்டும்.

தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர் அவருடைய கேள்விகள் ஏற்கப்பட்டதென அறிவித்தல் கிடைத்தவுடன் ஒருவாரகாலத்திற்குள் நியமிக்கப்பட்ட வைப்புப் பணத்தை செலுத்துவதுடன் இதற்கான ஒப்பந்தத்திற்கும் உடன் படல் வேண்டும் அப்படிச் செய்யத்தவறின் அவரது கேள்வி இரத்துச் செய்யப்படலாம்.

தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர் ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்வித் தொகையின் 5% ஒப்பந்தத்தின் படி வேலையைத் திருப்திகரமாக செய்து முடிக்க பிணைப்பணமாக பிராந்திய சுகாதார பணிப்பாளர் நியமிக்கும் வங்கியில் கட்ட வேண்டும். வேலை திருப்திகரமாக முடிந்தபின் இப்பணம் திருப்பிக் கொடுக்கப்படும்.

கேள்வி விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளுதல், எதையாவது நிராகரித்தல், அல்லது முற்ருக நிராகரித்தல் ஆகிய உரிமைக்கும், அனைத்துத் தீர்மானங்கள். இறுதி முடிவுகள் யாவும் கேள்விச்சபையைச் சார்ந்தது.

சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர்
யாழ்ப்பாணம்.

சு. சே. பி. ப. பணிமனை, யாழ்ப்பாணம்.

26 - 6 - 1986. (A-883)


## பிதா சிங்கராயர்...

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

காக ஏன் அவர்மீது குற்றஞ் சாட்டப்படவில்லை?

'எனது தரப்பாளர் சூழ்நிலைமைகளுக்குப் பலியாகியுள்ளார். அவர்ஒரு சமூக சேவையாளர் மட்டுமே. அரசாங்கத்தில் சேர்ந்து கொண்டால் திரு. அமிர்தலிங்கம் தனது மக்களுக்கு மேலும் பயனுடையவராக இருக்கலாம் என்று கூறி அவரை அரசாங்கத்தில் சேருமாறு அறிவுரை வழங்கியவரும் பிதா. சிங்கராயர்தான். ஆனல் திரு அமிர்தலிங்கம் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. ஒரு ஆயுதப் போராட்டத்துக்கு ஆதரவளிக்கத் தாம் தயாரில்லை என்பதையும் பிதா. சிங்கராயர் கூறியிருக்கிருர்.

''நீர்வேலி வங்கிக்கொள்ளை குறித்து பிதா. சிங்கராயர் எப்படி அறிந்து வைத்திருந்தார் என்பதுபற்றி தெளிவாக ஆராய விசாரணை அதிகாரி திரு. புண்யா டீ சில்வா பிரயத்தனஞ் செய்யவில்லை. ஏனெனில் அவர் விசாரணை மேற்கொண்டிருந்த வேளை பிதா. சிங்கராயாமீது என்னென்ன குற்றச்சாட்டுகள் சுமத்தப்படப் போகின்றன என்பதை அவர் அறிந்திருக்கவில்லை''

திரு. குமாரசாமியின் வாதம் தொடருகிறது. [ஷ]


## பணிவான வேண்டுகோள்

உருத்திரபுரத்தைச் சேர்ந்தவரும் முல்லைத்தீவு பல நோக்குக் கூட்டுறவுச் (முன்னுள் கிளிநொச்சி) சங்க பொதுமுகாமையாளரும், சமூக சேவையாளருமாகிய சுப்பிரமணியம் பேராயிரசிங்கம் கடந்த 15-6-86 அன்று பரந்தனில் வைத்து இனந்தெரியாதவர்களால் அழைத்துச்செல்லப்பட்டு இதுவரை விடுவிக்கப்படவில்லை அவரின் உடல் சுகவீனத்தையும் குடும்பப் பொறுப்பையும் கருத்தில்கொண்டு சம்பந்தப்பட்டவர்கள் அவரை விடுவிக்குமாறு பணிவன்புடன் வேண்டுகிறேம்.

கவலையால் வாடும்,
தாய், சகோதரர்கள்,
உற்ருர் உறவினர், நண்பர்கள்.

[C-3 42]



## வர்த்தகக் கல்லூரி,
## இளவாலை.

பெண்களுக்கான 2 மாத கால துரிதபயிற்சி!

1. நவீனமுறையில் உடை தயாரித்தல்.
2. சிகையலங்காரம்.
3. கேக் அலங்காரம்.
4. பொதுமுறை உணவு தயாரித்தல்.

தனிப்பட்ட பாடமாகவும் பயிலலாம். பயிற்சி முடிவில் சான்றிதழ்கள் வழங்கப்படும்,

ஆரம்பம் : 04-07-1986.

நேரடியாகத் தொடர்புகொள்ளலாம்.

அதிபர்,
வர்த்தகக் கல்லூரி,
அகஸ்தர் லேன், இளவாலை. C 3043



உ

## திருமண அழைப்பு

அன்புடையீர்,

கேதீச்சப் பெருமான் திருவருளை முன்னிட்டு நிகழும் மங்களகரமான அக்ஷய ஆண்டு ஆனித்திங்கள் 30ம் நாள் (14-7-86) திங்கட்கிழமை பூர்வபட்சம் ஸப்தமி திதியும் அத்த நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய சுபதினத்தில் காலை 9 மணிக்கு மேல் 10-30 மணிகுள்வரும் சிம்மலக்கினத்தில்,

எங்கள் (இ. நமசிவாயம் - மறைந்த விஜயலக்ஷ்மி நமசிவாயம்)
திருநிறை செல்வன் ஜெயந்திரன் அவர்களுக்கும்

எங்கள் (டாக்டர் சொர்ணலிங்கம் தம்பதிகள்)
திருநிறை செல்வி மஞ்சுளா அவர்களுக்கும்

சென்னை இராதாகிருஷ்ணன் சாலையில் இருக்கும் நியூ உடலன்ட்ஸ் ஹோட்டலில் நடைபெறும் திருமணத்திற்கும் உடன் நடத்தப்படும் விருந்துபசாரத்திற்கும் தாங்கள் தங்களகுடும்பத்தினருடன் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கிறேம்.

இங்ஙனம்:

தங்கள் அன்புள்ள:

இ. நமசிவாயம்,
செயலளர், திருக்கேதீச்சரம் ஆலய திருப்பணிச்சபை, மன்னர்.
எண்-6, மாதா சோர்ஜ் றோட்,
சென்னை 600028,

டாக்டர் சொர்ணலிங்கம் தம்பதிகள்,
54, செண்டல் அவெனியூ தெற்கு,
சர்றே CR 20 Q Q,
லண்டன்,
இங்கிலாந்து.

[A-873]



## உங்களுக்காக ஓர் இடமாற்றம்

கட்டுவன் ''ஜெயம் எலெக்ரோனிக்'' ஸ்தாபனம் தெல்லிப்பளை யானைக்குட்டி மதவடிக்கருகில், பாதுகாப்பான சூழலில், நவீன எலெக்ரோனிக் கருவிகள்

● Osillos Cops ● Pattern Generater ● Digital Meter
● Demagetnizer ● Frequency Counter

துணைகொண்டு கைதேர்ந்த தொழில்நுட்ப வல்லுனர்களால் உத்தரவாதத்துடன் உங்கள் ரி. வி., வீடியோடெக், ஓடியோடெக், மற்றும் சகல எலெக்ரோனிக் உபகரணங்களும் திருத்தி அமைத்துக் கொடுக்கப்படும்.

''ஜெயம் எலெக்ரோனிக்''

கே. கே. எஸ். வீதி,
தெல்லிப்பளை. [C-3115]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரயாண ஒழுங்குகள்

டென்மார்க், கனடா
(கொழும்பிலிருந்து நேரடிப் பிரயாணம்)

(30-ம் திகதி எமது முகவர் கூட்டிச் செல்வார்.)
எமது காரியாலயத்தில் பதிவு செய்தவர்கள்
உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

லிபியா குவைத்
சவூதி அரேபியா
ஆகிய நாடுகளுக்கு வேலை வாய்ப்பு.
அத்துடன்
பாஸ்போட், BOND. ரிக்கற்றிங்
ஆகியனவும் உடனடியாகச் செய்து கொடுக்கப்படும்.

**யூனிவேர்சல் ஏஜென்சி,**
125, (455), ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(ஆயுர்வேதக் கல்லூரிக்கு அருகாமையில்
பெற்றோலியம் கூட்டுத்தாபனத்திற்கு முன்பாக.)
(A 757)



## ஓர் முக்கிய அறிவித்தல்

தோலகட்டி தயாரிப்புக்கள் நகரில் தாராளமாக கிடைக்கின்றது.
தட்டுப்பாடோ அல்லது கட்டுப்பாடோ கிடையாது.
எது எப்படியானாலும் எமது தயாரிப்புக்கள்
தொடர்ந்து கிடைக்கும்.
போலிகள்! கவனம்
எமது நெல்லி ரச லேபலில்
ஒரு மணிக்கூட்டு கோபுரம் உண்டு
அதில் நேரம் 6–20 மணியைக் காட்டுகின்றது.
ஆகவே உன்னிப்பாக கவனித்து வாங்கவும்.
இவ் இளவேனிற் காலத்தில்
**தோலகட்டி நெல்லிரசம்**
உங்கள் தாகத்தை நிச்சயம் பூர்த்தி செய்யும்.

**செபமாலை தாசர் சபை,**
தோலகட்டி, வயாவிளான்.

ஏகப் பிரதிநிதிகள்:
**ஜோ. எகட்டன்,**
செனித் மார்க்கட்டிங், யாழ்நகர்.

யாழ்நகரில் மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள:
**வரணி மிசன் விற்பனை நிலையம்,**
145, நவீன சந்தை, யாழ்நகர்.
(A 753)



## BRITE SOAP WASHES BRIGHT




Net Weight: 130 Grams Price: Rs. 2-25
கைதேர்ந்த தொழிலாளர்களால்
விஞ்ஞானமுறைப்படி தயாரிப்பவர்கள்
TURBOW COMMERCIAL - ALAVEDDY
★ ★ ★ ★
பிரகாசமான சலவைக்கு
**பிறைற் சோப்**
(A 339)


முதலாவது
ஆண்டு
நினைவஞ்சலி



**கந்தையா
சுப்பிரமணியம்**

(முன்னாள் உதவி அரசாங்க அதிபர், கிளிநொச்சி, தெல்லிப்பழை)

மலர்வு : 28-03-1932
உதிர்வு : 10-07-1985
ஆண்டு திதி: 29-06-1986

எங்கள் அன்புத் தெய்வத்தின் ஓராண்டு நிறைவை இன்று வேதனையுடன் நினைவு கூர்கிறோம்.
தங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

மனைவி, மக்கள்,
உற்றார், உறவினர்.
C 3125

31-ம் நாள்
நினைவஞ்சலி



அமரர்
**அ. கதிரவேலு**
Retd Chief Railway Guard
(பொற்கலந்தம்பை)

தோற்றம்: 21-8-1922
மறைவு: 29-05-86

மாறாத அன்போடும், மட்டற்ற மகிழ்வோடும், சீரோடு சிறப்பெய்தி பேரோடு புகழ்பெற்று மற்றோர் மதிக்க வாழ வைத்த எங்கள் அன்புத் தெய்வம் மறைந்து இன்றுடன் 31 நாட்கள் சென்று விட்டன நீங்கள் மறைந்தாலும் உங்கள் அன்பும், பாசமும், எம்மை வழி நடத்திச்செல்லும். அன்னாரின் ஆத்ம சாந்திக்கு எம்முடன் இணைந்து பிரார்த்தித்து இன்று நடைபெறும் வீட்டுக் கிருத்தியத்தில் பங்கு பற்றுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

மனைவி மக்கள்,
மருமகன்,
பேரப்பிள்ளைகள்.

பொற்கலந்தம்பை,
தெல்லிப்பழை.
(C 3130)


## QUANTITY SURVEYING 86/87

(CITY AND GUILDS - LONDON)
PART - I and II
வகுப்புகள் 05-07-86 அன்று ஆரம்பமாகவுள்ளன.
உயர்கலைக்கல்லூரி.
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (C-2945)



TEI KNOWLEDGE IS WEALTH

வகுப்புகள்
ஆரம்பம்!
Technical
Engineering
Institute

- Basic எலக்ரோனிக்ஸ் அன்ட் ரேடியோ, T. V. ரிப்பியாரிங்
- ஆட்டோமோபைல் ரிப்பியாரிங்,
- டீசல் மெக்கானிசம் அன்ட் ரிப்பியாரிங்,
- எயார்கொன்டிசனர் அன்ட் ரேப்பிரிஜிரேட்டர் ரிப்பியாரிங்,
- Draftsmanship
- எலக்ரிக் வயரிங்.

வகுப்புகள் ஆரம்பம்: 1 - 7 - 86
கற்பித்தல், பரீட்சை, சான்றிதழ், வகுப்புகளில் சேர உடன் பதிவு கொள்ளவும்.
C/o PILOT INSTITUTE,
151, செம்மணி ரோட், நல்லூர்,
(கல்விக்கந்தோருக்கு அண்மையில்) (A-739)



## பிரயாண ஒழுங்குகள்

கனடா டென்மார்க்
சவூதி அரேபியா

அ. கனடா செல்லவிரும்புவோர்க்கு ஓர் அரிய சந்தர்ப்பம் எமதுமுகவர் உங்களை கனடா வரை அழைத்துச் செல்வார். செல்லவிரும்புவோர் யூலை 5ம் திகதிக்கு பிந்தாமல் தொடர்பு கொள்ளவும்.

ஆ. டென்மார்க்குக்கு எமது முகவர் வாரத்திற்கு ஒரு தடவை உங்களை அழைத்துச் செல்வார். செல்ல விரும்புவோர் உடன் கீழ்க்காணும் விலாசத்தில் தொடர்பு கொள்ளவும்.

இ. சவூதி அரேபியாவுக்கு (Labour) தொழிலாளர்கள் உடன் தேவை. செல்லவிரும்புவோர் 5-ம் திகதிக்குப் பிந்தாமல் தங்களது பாஸ்போட்டுடன் 6 படங்களும் கொண்டு வந்து நேரில் எமது ஸ்தாபனத்தில் சமர்ப்பித்து வெற்றிடங்களுக்கு முன்னுரிமை பெற்றுக்கொள்ளவும்.

ஈ. கனடா, டென்மார்க், ஆகிய நாடுகளுக்கான பிரயாணசேவை (Colombo) கொழும்பில் இருந்து நேரடியாக நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

யாவற்றுக்கும் தொடர்பு கொள்ள வேண்டியமுகவரி;

**N. BALA**
திருச்செல்வம் வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

பிற்குறிப்பு:
(பஸ்வழி இல. 764
பலாலி வீதி, கோண்டாவில்
சந்திக்கு அருகாமை)
(C 3088)



ANITA SCHOOL OF DRESS MAKING
HAIR STYLE COOKERY, FLOWER MAKING

## மனைப் பொருளியல் Home Economics

டிப்ளோமா வகுப்புகள் யூலை 1ந் திகதி ஆரம்பிக்கப்படுகின்றன.

பயிற்சியளிக்கும் பாடங்களாவன:
1. தையல் Dress Making
2. சமையல் Cookery
3. கேக் ஐசிங் Cake Icing
4. கூந்தல அலங்காரம் Hair Style
5. மலர்கள் செய்தல் Flower Making
6. மக்கிரம் செய்தல் Mack Ram
7. துணியில் சித்திரம் வரைதல் Fabric Painting
8. Toys Making, நூல், சண்ணுடி முதலியவற்றில் அலங்காரப் பொருட்கள் அமைத்தல்.

இவற்றிற்கான டிப்புளோமா சான்றிதழ்களும் 6மாத முடிவில் வழங்கப்படும். பாடசாலை மாணவர்களுக்கும் இல்லத்தரசிகளுக்கும் இலகுவான நேரங்களில் நடைபெறும்.

விபரங்களுக்குத் தொடர்பு கொள்ளவும்:
**திருமதி
பவளம் சிவசுப்பிரமணியம்**
பூநாரி மரத்தடி
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
C 3120


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெதடிஸ்த திருச்சபையும்...

(4-ம்பக்கத் தொடர்ச்சி)

விஞ்ச் அவர்களும், திருகு ஸ்குவான்ஸ் அவர்களும் நியமிக்கப்பட்டனர் 1814ம் ஆண்டு ஆகஸ்ட் 1ந் திகதி யன்று கொழும்பிலிருந்துபுறப் பட்டுப் 10 நாள் கஷ்டமான தரைப் பயணத்தின் பின்பு, தோமஸ் ஸ்குவான்ஸ் அவர்கள் யாழ்ப்பாணம் வந்துசேர்ந்தனர். தோமஸ், ஸ்குவான்ஸ் இவர்களிருவரும் கஷ்டமான காட்டுப்பாதைக ளினூடாக250மைல்தூரத்தை நடந்து யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர். வில்லியம் ஓல்ற் அயர் 200 மைல்களை பெருங் காற்றின் மத்தியிலே கடல் மார்க்கமாகப் பயணப்பட்டு மட்டக்களப்பை அடைந்தார்.

## யாழ்ப்பாணத்திலே

## திருச்சபையின் பணி:-

யாழ்ப்பாணம் வந்த மெதடுஸ்த திருச்சபையினர் கோட்டிடக்குள் இருக்கும் பழைய ஆலயத்தில் வழிபாட்டை நடாத்தியயோடு, தெருக்களிலும், சந்தைகளிலும் நற்செய்தி கூட்டங்களை நடத்தினார்கள். பனை ஓலைகளில்கிறிஸ்துவின் நல்வாக்குகளை எழுதி மக்களுக்கு விநியோகித்தனர்.

தற்போது யாழ்ப்பாண மத்திய கல்லூரி மண்டபம் அமைந்திருக்கும் இடத்திலிருந்த லூத்தரன் ஆலயம் வழிபாட்டிற்காகப் பாவிக்கப்பட்டது. இடம் போதாமையினால் சற்று அப்பால் உள்ள நிலத்தை வாங்கி அதில் ஆலயத்தைக்கட்டி 1823ம் ஆண்டு பெப்ரவரி 19ம் திகதி பரி. பேதுரு ஆலயம் என்ற பெயரோடு பிரதிஷ்டை செய்யப்பட்டது தற்போது யாழ்ப்பாணத்திலுள்ள பதற்றமும் பயமும் உள்ள சூழ் நிலையிலும் கூட மெடிஸ்த கிறிஸ்தவர்கள் இவ்வாலயத்திற்குச் சென்று வழிபடுவது இறைவனின் அளவிட முடியாத ஆசீர்வாதமாகும்.

சமூகத்தொண்டைக் கடவுளுக்குச் செய்யும் தொண்டாகக் கருதி மெதடிஸ்த திருச்சபையினர் செயற்பட்டனர்; யாழ்ப்பாணச் சூழ் நிலையில் அனேக பாடசாலைகளை நிறுவி கல்விப்பணியை வளர்த்தனர் பேர்சீவல் போதகரின் காலத்தில் யாழ்ப்பாண மத்திய கல்லூரியும், வேம்படி மகளிர் கல்லூரியும் ஸ்தாபிக்கப்பட்டன ஆங்கிலக் கல்வி மிகவும் போற்றத்தக்க முறையில் புகட்டப்பட்டது பெண்கள் படிக்கக்கூடாது'' ''அவர்களது இடம் அடுப்பங்கரைதான்'' என்று கூறிய அன்றைய சமுதாயத்தில் பெண்களுக்கு கல்வியூட்ட மெதடிஸ்த திருச்சபையினர் அயராது உழைத்தனர் யாழ்ப்பாணக் குடாநாடு முழுவதிலும் ஆண்களோடு பெண்களும் சமமாகக் கல்விகற்று இன்று திகழ்வதற்கு ஒரே காரணம் மிஷனறிமார் கல்வியுலகில் ஆற்றிய மகத்தான பணியேயாகும்.

மெதடிஸ்த திருச்சபையினர் மிஷனறி ஊழியகாலத்தில் தம்மை முழுமையாக சுவிசேஷ பணி, கல்விப்பணி, மருத்துவ பணி, இம் மூன்றுக்கும் அர்ப்பணித்தனர்

இன்று எம் நாட்டில் மக்கள் சோதனைகளையும் வேதனைகளையும் அனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள். வன்செயல்கள் இனப்படுகொலைகள், களவு, கற்பழிப்பு, அரசியல் வெறியாட்டம் எனும் பாவச்செயல்கள் பெருகிக்கொண்டுபோகின்றன. இன்று நாம் என்ன செய்யவேண்டும்? இன்று எங்கு பார்த்தாலும் பதற்றம், பயபீதி! எம்மை எதிர்கொள்ளும் இந்தச் சவால்களுக்கு முகம் கொடுக்க மிஷனறிமாரின் தியாகப் பாதையில் செல்ல வேண்டும்.

தனக்கென வாழாப் பிறர்க்குரியவர்களாக வாழும் உணர்வைப் பெற்று அன்புள்ளம் கொண்டவர்களாக எங்களை ஒறுத்து அகதிகளுக்கு, அநாதைகளுக்கு உதவ முன்வரவேண்டும். இழப்புக்களைச் சந்தித்தவர்களுக்கு ஆறுதல் மொழி சொல்லவேண்டும். அவர்களுக்காகவும் அவர்களுக்கு ஆறுதலை கொடுக்கும் படியாகவும் நாம் இறைவனிடம் ஜெபிக்கவேண்டும்.

இவற்றையெல்லாம் நாம் செய்யவேண்டுமாயின் மிஷனறிமார் விட்டுச்சென்ற பணியைத் தொடரவேண்டும் அவர்களைப் போன்று தியாக உணர்வு, அன்புள்ளம் இரக்க சிந்தை, சகிப்புத்தன்மை கொண்டவர்களாக எமது பணிகளைச் செய்யத் திடசங்கற்பம் செய்துகொள்வோம்.


## களவாக கள் விற்பனை தடைசெய்தல்

யாழ். மாநகர தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்க எல்லைக்குள் களவாக கள் விற்பனை செய்வதைத் தடைசெய்யும் நோக்குடன் எம்மால் கடந்த காலங்களில் விடுக்கப்பட்ட அறிவித்தலையும் மீறி தொடர்ந்தும் கள் விற்பனை களவாகச் செய்யப்படுகிறது. கள்விற்பனை செய்வது கூட்டுறவுச் சங்கத்திற்கு மட்டுமே உரியது. இதனைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்காக இளைஞர் குழுக்கள் செல்லும் பொழுது கள்ள விற்பனை செய்பவர்கள் தங்களுக்கு எவ்வித முன்னறிவித்தலும் கொடுக்கவில்லையென்ற காரணத்தைக்கூறி தொடர்ந்தும் கள்விற்பனையைச் செய்து வருகின்றார்கள் இது சம்பந்தமாக மேற்படி எமது சங்கமும், இளைஞர் குழுக்களு ஒன்றுசேர்ந்து இறுதியாகத் தெரியப்படுத்துவது யாதெனில், எமது சங்கத்தால் நிர்ணயிக்கப் பட்டுள்ள தவறணைகள் தவிர்ந்த ஏனைய அனுமதியற்ற கள்விற்பனை நிலையங்களில் மேலும் தொடர்ந்து கள்விற்பனை செய்வது கண்டுபிடிக்கப்படும்பட்சத்தில், கள்ளும் கள் விற்பனைக்கும் பயன்படுத்தப்படும் உபகரணங்களும் பறிமுதல் செய்யப்படும்

அனுமதிபற்ற கள்விற்பனை நிலையங்களை அமைப்பதற்கு இடம் கொடுத்துதவியவர்கள் உடனடியாக அவற்றினை மூடிவிடுவதற்கான நடவடிக்கைகளைச் செய்யவேண்டுமெனவும், தொடர்ந்தும் கள்ள கள் விற்பனை செய்வதற்கு இடங்கொடுத்தவர்களுக்கெதிராகவும் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் எமது சங்க எல்லைப்பரப்பினுள் சங்கத்தால் இலக்கமிடப்படாத மரங்களில் கள் சீவுவது தடை செய்யப்படுவதோடு அம்மரங்களில் உள்ள பாளைகள் வெட்டுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் அறியத் தருகின்றோம்.

இயக்குநர்சபை,
யாழ்.மாநகர தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம்.

(A-885)


## நாவற்குழி--

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தினார்கள்.

ஷெல்ஏவப்படும்சமயம்மேலேயிருந்துஹெலிகாப்டர்தாக்குதலும் நடைபெற்றது. இச்சம்பவத்தில் பலியானவரின் சடலம் யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்து வரப்பட்டு சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது. ஹெலிகொப்டரிலிருந்து சுடப்பட்டபோது சமையலில் ஈடுபட்டிருந்த திருமதி சுப்பிரமணியம் நீற்றம்மா [வயது 35] கையில் காயமடைந்து யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நாவற்குழி 'ஷெல்' தாக்குதலில் கரவெட்டியைச் சேர்ந்த வி. தவராசா (32 வயது) பலியானார். இவர் வீடமைப்பு திட்ட பாதுகாப்பு ஊழியராவர்.

மேலும் ஷெல் தாக்குதலிலும் ஹெலிகொப்டர் தாக்குதலிலும் காயமடைந்த இருவர் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கபடட்டுள்ளனர். (ஐ)


### கடைசிநேர வரிவிளம்பரம்

### காணவில்லை

யாழ்ப்பாணம் மாநகர தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்க காரியாலயத்திற்கு முன்பாக 29-6-86 சனிக்கிழமை காலை வைக்கப்பட்டிருந்த A 14985 இலக்கமுடையதும் ரூபா 1825/- பெறுமதியுடையதுமான ''LUMALA'' 22 அங்குல துவிச்சக்கர வண்டியைக் காணவில்லை. இதனைக் கண்டுபிடிக்கக்கூடிய தகவல் தருபவருக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும் வே. சுப்பையா, J.P., முத்தமிழ்வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம் என்றவிலாசத்துடன் தொடர்புகொள்ளவும். [C3166]


சாம்பல்தீவு தேடுதல் வேட்டை

# 9 பேர் சுட்டுக்கொலை 7 வீடுகள் சேதம்

யாழ்ப்பாணம் ஞாயிறு திருமலை மாவட்டத்திலுள்ள 6ம் கட்டைப் பகுதியில் தேடுதல் நடவடிக்கையிலீடுபட்டிருந்த ஆயுதப் படையினர்9 பேரைச் சுட்டுக் கொன்றுள்ளதுடன் 7 வீடுகளுக்குக் குண்டு வைத்தும் தீ மூட்டியும் சேதப் படுத்தியுள்ளனர்.

சபாரத்தினம் (34 வயது). செல்வம் 23 [வயது), நடராசா (53 வயது). அல்பேட் (23 வயது) மற்றும் 3அகதிகளும் மேலும் இருவருமே சுட்டுக் கொல்லப் பட்டவர்களாவர்.

சாம்பல்தீவுக்கு தேடுதல் வேட்டைக்குச் சென்ற ஆயுதப் படையினரைப் போராளிகள் எதிர்கொண்டு தாக்குதல் நடத்தினர். எதிர்த் தாக்குதலின் போது ஆயுதப் படையினர் முகாமுக்குத் திரும்பி மீண்டும் 50 முஸ்லிம் பொதுமக்களுடன் முன்னால் செல்லவிட்டு 6ம் கட்டைப் பகுதி நோக்கிப் பின்னால் சென்றனர் அப்பொழுதே மேற் குறிப்பிட்ட 9 பேரும் சுடப்பட்டதாகத் தெரிவிக்கப் படுகிறது. [மா]

## படைகள் —

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ராளிகள் மீண்டும் சுற்றிவளைத்துத் தாக்ததல் நடாத்தியதில் கொமாண்டோக்கள் தரப்பில் பலத்த சேதமேற்பட்டது. போராளிகள் தரப்பில் மேலும் மூவர் மரணமெய்தினர்.

மேலதிகமாகவந்த படையினரை விடுதலைப்புலிகள் சுற்றிவளைத்துத் தாக்குதல் நடத்தினர்.

இந்த நேரடி மோதலின் போது வீரமரணமடைந்த லெப்டினன்ட் மொட்டைக்கஜன், குமார், றெசான் ஆகியோருக்கு தமது வீரவணக்கத்தைச் செலுத்துவதாகப் போராளிகள் தெரிவித்துள்ளனர். (மா)

## தம்பலகாமம்--

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கொலைசெய்ததாக கூறப்படுகிறது.

மில் உரிமையாளர் கை கால் வழங்காததால் உயிர் தப்பித்துக்கொண்டார். இவரது மகன் லோகிராசா என்பவர் தமது தாயைதேடிக் கொண்டு சென்ற பொழுதே இச் சடலங்கள் கிடக்கக்கண்டாராம்

## ராஜீவுக்கு கடிதம்

யாழ்ப்பாணம் ஞாயிறு

''திருமலையில் செய்தது போன்று கிளிநொச்சியிலும் தமிழரை அழிக்கும் முயற்சியில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது இந்நிலையில் அப்பாவித் தமிழரைக் காப்பாற்றுமாறு கேட்டுக்கொள்கிறோம்'

இவ்வாறு கிளிநொச்சி அத்தியாவசிய சேவைகள் குழுவினால் இந்திய ராஜீவ் காந்திக்கு அனுப்பப்பட்டுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (செ)

## உழவுஇயந்---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ரோந்து நடவடிக்கைக்கு உதவியாக இரு பொம்பர் விமானங்கள் அபரிமிதமாகக் குண்டுகளை வீசின, ஹெலிகொப்டர்கள் சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்தன.

குண்டுகளை வீசிய விமானங்களையும், ஹெலிகொப்டர்களையும் நோக்கி விடுதலைப் புலிகள் எதிர்த்தாக்குதல் நடத்தினர்.

இதுவிஷயம் இவ்வாறிருக்க. நேற்று முன்தினம் காலை கொழும்பிலிருந்து வந்தசுமார் 150 வாகனங்கள் தொடர்ந்து ஆனையிறவுக்கும் பரந்தனுக்குமிடையில் நிறுத்திவைக்கப்பட்டிருக்கின்றன. இந்தவாகனங்கள் யாழ்ப்பாணம் வந்துசேர முடியாமலும் மீண்டும் திரும்பிச் செல்லமுடியாமலும் திரிசங்கு சொர்க்க நிலையில் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுகிளிநொச்சியில்இடம் பெற்ற விமானக்குண்டு வீச்சுக்கு சில வாகனங்கள் இலக்காகி சேதமடைந்துள்ளதாகவும் பலர் படுகாயமுற்றோ, மரணமாகியோ இருக்கலாம் என்றும் அஞ்சப்படுகிறது

நேற்றுமாலை பரந்தன்-முல்லைத்தீவு வீதியிலுள்ள மதகு ஒன்று குண்டு வைத்து தகர்க்கப்பட்டுள்ளது. இதனால் இவ்வீதியால்போக்கு வரத்தும் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. (மா)


# 41-ம் நாள் நினைவஞ்சலி



க.சிறீதரன்
(கெங்கா)
காங்கேசன்துறை
பிறப்பு: 64-05-28
இறப்பு: 19 5-86

மண்ணினை
மீட்பதற்கான
உமதரிய பணியிலே
வீரமரணம் எய்தி
விண்புகழ் அடைந்த
தோழர்களே!
எம்மினம் எவருக்கும்
அடிமையல்ல
எம்பெண்டீர்
எமக்கடிமையல்ல
பாட்டாளி முதலாளிக்
கடிமையல்ல
கீழோர் மேலோருக்
கடிமையல்ல

எனக்கூறி:
நாட்டினை மீட்பதோடு
நமதின அடக்குமுறை
களைவோமென
வீர நடைபோட்டு
களமதில்
வீரமரணமடைந்த
இனிய தோழர்களே!
நீங்கள் இன்று
அழியவில்லை
போராடும்
இளைஞரோடும்
விடுதலைபெறத்
துடிக்கும் மக்களோடும்
என்றும்வாழ்கின்றீர்கள்



நா. செல்வரத்தினம்
(ஸ்ரீபன்)
பலாலி
பிறப்பு: 68-01-16
இறப்பு: 19-5-86

உங்கள் சுவடுகள் முன்னேறுகின்றன.

தோழர்கள், நண்பர்கள்.
பலாலி

[C3174]

வெலிங்டன்
10-30, 2-30, 6-15
மோகன் - பூர்ணிமா - சுஜாத்தா-ஜெய்சங்கர் நடித்த
விதி
(கலர் - புதிய பிரதி)

கடைசிவாரம்
லிடோ
காலை 10-30, 2-30, 6-30
கமல்-ரஜனி-ஸ்ரீதேவி-ஜெய்கணேஷ்-நாகேஷ் நடித்த
தாயில்லாமல் நானில்லை
(கலர்)
அடுத்து
நீதிக்குத்தலைவணங்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY
ஞாயிற்றுக்கிழமை 29 6-86

# அரசியல்தீர்வுக்கான அரசு முன்வைத்த யோசனைகள்

கொழும்பு, சனி

''ஓர் அரசியல் தீர்வினைக் காணுகின்ற பாதையில் இது ஒரு நிர்ணயமான கட்டமாதலால் நாம் இன்று ஒரு புதிய அத்தியாயத்தை ஆரம்பித்து வைக்கிறோம் இலங்கை ஒரு பல்லின, பலமத நாடு. எல்லோருக்கும் ஒரு மேம்பட்ட எதிர்காலத்தை உருவாக்குவதற்காக, இம்மக்கள் மத்தியிலான கடந்தகால ஐயப்பாடுகள் மறக்கப்பட்டவேண்டும்.''

இன்றைய பிரச்னைக்குத்தீர்வு காணும அரசின் யோசனைகளை ஆராயவெனக் கூட்டப்பட்ட அரசியல் கட்சியினது மாநாட்டினை ஆரம்பித்துவைத்துப் பேசுகையில் ஜனாதிபதி திரு ஜே. ஆர், ஜயவர்த்தன மேற்கண்டவாறு கூறினார்

இம்மாநாட்டில் இலங்கையின் ஐக்கியம், ஒருமைப்பாடு, இறைமை ஆகியவற்றினைப் பேணுவது, இலங்கை அரசியல் யாப்பின் ஒற்றையாட்சியியல்பினைப் பேணுவது, அரசியல்யாப்பினது கட்டுக்கோப்பினுள் மாகாண சபைகளுக்கு அதிகாரங்களைப் பரவற்படுத்தும் கோட்பாடுகள் ஆகியவற்றினடிப்படையில் அரசியல் கட்சிகளின் பரிசீலனைக்கென ஜனாதிபதி முன்வைத்த யோசனைகளின் சுருக்கம் வருமாறு:

★ மத்திய அரசாங்கத்தைத் தவிர அரசு ஆட்சியதிகாரத்தைப் பிரயோகிக்கும் முக்கிய அமைப்புக்கள்: மாகாணசபைகள்; மாநகர, நகர சபைகள்; பிரதேச சபைகள்

★ தற்போதுள்ள மாகாண எல்லைகள் மாகாண சபைகளின் அதிகாரப் பரப்பின் எல்லைகளாயிருக்கும்.

★ திருமலைத் துறைப்பிரதேசத்தின் நிர்வாக, பொருளாதார விருத்திக்கென ஒரு அதிகாரசபை இருக்கும்

## நிறைவேற்று அதிகாரம்

★ நாடாளுமன்றக் சட்டத்தில் வரையறுக்கப்பட்ட விஷயங்கள் தொடர்பாக சட்டமியற்றும் அதிகாரம் மாகாண சபைகளுக்கு இருக்கும். ஜனாதிபதியால் நியமிக்கப்படும் மாகாண கவர்னர் மாகாண சபையின் முதலமைச்சரை நியமிப்பார். அமைச்சரவையைத் தெரிவுசெய்யும் அதிகாரம் முதலமைச்சருக்கும் மாகாண சபைகளின் நிறைவேற்றதிகாரம் கவர்னரிடம் ஒப்புவிக்கப்பட்டு, நேரடியாக அவரால் அல்லது அவரது உதவியாளர்களால் பிரயோகிக்கப்படும். முதலமைச்சரும் அமைச்சரவை உறுப்பினர்களும் கட்டாயம் நாடாளுமன்ற உறுப்பினர்களாயிருக்க வேண்டியதல்லை.

## நிதி

★ வரிவாங்குவதற்கும், கடன்கள் பெறுவதற்குமான அதிகாரம் மாகாணசபைகளுக்கிருக்கும் வெளிநாட்டுக்கடன்கள் மற்றும் மானியங்களைப் பெறுவதில் இலங்கை அரசின் அங்கீகாரம் பெறவேண்டும்.

## தேர்தல்

★ விகிதாசாரப் பிரதிநிதித்துவ அடிப்படையில் மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் நடைபெறும். மாகாணசபையின் பதவிக்காலம் நாடாளுமன்றத்தின் பதவிக்காலத்தையொட்டியதாக இருக்கும்.

## விவசாயம் தொழிற்றுறை

★ நாட்டின் எந்தவொரு பகுதியினது விவசாய, தொழிற்றுறைஅபிவிருத்தியை திட்டமிடுகின்ற, அமுல்படுத்துகின்ற, தேசியக் கொள்கையை வகுக்கும் உரிமை மத்திய அரசாங்கத்திடமிருக்கும். இக் கொள்கைக்கமைய தமது பிரதேசங்களில் தொழிற்துறைகளை நிறுவும் அதிகாரம் மாகாண சபைகளுக்கிருக்கும்.

## சட்டம், ஒழுங்கு

★ தேசிய பாதுகாப்பு, தேசிய பந்தோபஸ்து, சிவில் ஆட்சிக்குத் துணையாக அரச ஆயுதப் படைகளைப் பயன்படுத்துவது ஆகியன தவிர்ந்தவிஷயங்கள் தொடர்பான அதிகாரமே மாகாணசபைகளுக்குப் பரவற்படுத்தப்படும். பொலிஸ் படையில் தேசிய பிரிவு, மாகாணப்பிரிவு என இருபிரிவுகளிருக்கும் மாகாணப்பிரிவுக்குப் பொலிஸ்திரட்டும்பணி மாகாண பொலிஸ் கமிஷனால் மேற்கொள்ளப்படும்.

## காணி, குடியேற்றம்

★ அரச காணிகள், மாகாணங்களுக்கிடைப்பட்ட நீர்ப்பாசன அபிவிருத்தி திட்டங்கள் ஆகியவை தவிர்ந்த காணிகளில் காணிப்பகிர்வு, காணி ஒதுக்கீடு, காணிச்சீர்திருத்தம் முதலானவற்றை மேற்கொள்ளும அதிகாரம் மாகாணசபைகளுக்குப்பரவல்படுத்தப்படும். (ஷ)

## யாழ் வர்த்தக சங்கம் முடிவு

யாழ்ப்பாணம், ஞாயிறு

பொதுமக்களின் பாவனைக்காக எஸ். வி. முருகேசு ஸ்தாபனத்தால் கொழும்பிலிருந்து லொறி மூலம் யாழ்ப்பாணம் கொண்டுவரப்பட்ட சுமார் 6லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் கொள்ளையடிக்கப்பட்டதனை ஆட்சேபித்து எதிர்ப்புத் தெரிவிக்குமுகமாக யூலை இரண்டாம் திகதி புதன்கிழமை பூரண கடையடைப்புச் செய்வதென யாழ். வர்த்தக சங்கம் முடிவுசெய்துள்ளது. [ஐ]

## காரைநகரில்
# 'ஷெல்' தாக்குதல்; ஒருவர் பலி; இருவர் காயம்

யாழ்ப்பாணம் ஞாயிறு

காரைநகர் கடற்படைமுகாமிலிருந்து நேற்று முன்தினம் மாலை மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலில் காரைநகர் தோப்புக்காட்டைச் சேர்ந்த ஒருவர் பலியானதுடன் இருவர் பலத்த காயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளளர்.

நேற்றுமுன்தினம் கடற்படை முகாமிலிருந்து கறுப்புச்சட்டைக்காரர்கள் வெளியே வந்ததால் அப்பகுதியில் பெரும் பதற்றமேற்பட்டது.

முகாமிலிருந்து வெளியேவந்தவர்கள் பாலாவோடைச் சந்திக்கு வந்தபோது அப்பகுதி கடைகள் பாடசாலைகள் உடனடியாகமூடப்பட்டது. பொதுமக்கள் பயத்தினால் வீடுகளில் தங்கியிருந்தனர்.

இதனைத்தொடர்ந்து சகல இயக்கப் போராளிகளும் அவ்விடம் சென்றதையடுத்து கறுப்புச் சட்டைக்காரர்கள் முகாம் திரும்பினர் (சிவ)

## வீடுகளுக்கு கல்வீச்சு

வட்டுக்கோட்டை, சனி

வட்டுக்கோட்டை தெல்லிப்பழை வீதியில் அமைந்துள்ள ஆசிரியரின் வீட்டிற்கு கல்வீச்சு நடந்துள்ளது. இக் கல்வீச்சுசம்பவத்தைஆட்சேபித்த மற்றுமொரு ஆசிரியர் வீடும் கல்வீச்சுக்கு இலக்கானது.

## இருவர் பலி ஐவர் கைது

மட்டக்களப்பு, சனி

மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடியில்குறிப்பிட்ட சில வீடுகளை சுற்றிவளைத்த அதிரடிப்படையினர் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததில் இருவர் கொல்லப்பட்டனர் ஐந்துபேர் கைதுசெய்யப்பட்டனர்.

நேற்று அதிகாலை நடைபெற்ற இச்சம்பவத்தில் வாணன், குமார் ஆகிய இருவருமே, கொல்லப்பட்டவர்களாவர் மேலும் ஆசிரியர் ஒருவர் கடுமையாகத் தாக்குதலுக்குள்ளானதைத் தொடர்ந்து அவர் களுவாஞ்சிக்குடி ஆஸ்பத்திரியில அனுமதிக்கப்பட்டார்.

இத்தேடுதல் நடவடிக்கையின்போது வீடுகளிலிருந்த பெண்களும் தாக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (மா)

## தீவுப்பகுதியில கற்பிக்கும்
# வெளியூர் ஆசிரியர்களுக்கு விடுதிவசதி அளிக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஞாயிறு

தீவுப்பகுதி பாடசாலைகளில் கற்பிக்கும் வெளியூர் ஆசிரியர்கள் தங்குவதற்கு வேலணை சேர். வைத்திலிங்கம் துரைச்சுவாமி ம. ம. வித்தியாலய விடுதியை பயன்படுத்துவதற்கு வட்டார கல்வி அதிகாரிமூலம் ஏற்ற ஒழுங்குகளை மேற்கொள்வதாக யாழ். கல்விப்பணிப்பாளர் இரா. தசுந்ரலிங்கம் நேற்று முன்தினம் உறுதியளித்துள்ளார்

தீவுப்பகுதியில் கடமையாற்றும்வெளியூர் ஆசிரியர்களின் பிரதிநிதிகள ஆசிரியர் பொ. பாலச்சந்திரா தலைமையில் கல்விப்பணிப்பாளர் திரு இரா சுந்தரலிங்கத்தை சந்தித்து தமது கோரிக்கைகள் பற்றி கலந்துரையாடினார்கள்.

கல்விப்பணிப்பாளர் பின்வரும் கோரிக்கைகளையும் ஏற்றுக் கொண்டு செயற்படுவதாக உறுதியளித்தார்.

திங்கட்கிழமை தீவுப்பகுதிக்கு செல்வதற்கும் வெள்ளிக்கிழமை திரும்பி வருவதற்கும் வட பிராந்திய போக்குவரத்துச்சபை பஸ்சேவையை ஒழுங்கு செய்வது;

வெளியூர் ஆசிரியர்களுக்கு விடுதியில இருந்து செயற்படுவதற்கு வசதியான பாடசாலைகளுக்கு இடமாற்றங்களை உடனடியாக செயற்படுத்துவது;

திருமணமான ஆசியைகளின் நலனை கருத்தில் கொள்வது;

சேவை மூப்பின் அடிப்படையில் நியாயமான முறையில் இடமாற்றங்களை உரிய காலங்களில் செய்வது.

மேற்படி சந்திப்பின்போது வேலணை வட்டாரக் கல்வி அதிகாரி திரு. பொன். கணேசனும் சமுகமளித்திருந்தார். [க]

## 11 பேர் விடுதலை

வவனியா, சனி

வன்னி ஆயுதப்படை தடுப்பு முகாமில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டிருந்த 11பேர் நேற்று முன்தினம் விடுதலை செய்யப்பட்டனர்.

விடுதலை செய்யப்பட்டோரின் பெயர்கள் வருமாறு: கே சுந்தரம், இ. கந்தசாமி, த. பழனிஐயா, தா. செல்வராஜா மா, தர்மராஜா, பா. சந்திரன், எம். யுனைதீன், எஸ், வாசுதேவன், எஸ், குலேந்திரன், செ பிரபாகரன், எல் வீரசிங்கம்;

## ஒருவர் பலி

மட்டக்களப்பு, சனி

மட்டக்களப்பு கருவேப்பங்கேணியிலுள்ள வீடொன்றை சுற்றிவளைத்த அதிரடிப்படையினர் 4பேரைக் கைது செய்துள்ளனர்.

மேலும் ஒரு இளைஞரை வீட்டில் வைத்து சித்திரவதை செய்தபின்பு துப்பாக்கியாற் சுட்டுக்கொன்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. (மா)

## கூட்டம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம் ஞாயிறு

பிரஜைகள் குழுக்களின் இணைப்புக் குழுக் கூட்டம் ஜூலை6 ம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## அடங்காத,,,

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மாணவர்களின்கல்வி பாதிப்படைந்துள்ளதற்கு அதிபர்களின் கூட்டத்தில் மாவட்டக் கல்விப் பணிப்பாளர் ஜனாப் மன்சூர் ஆழ்ந்த கவலை தெரிவித்தார்.

இக் கூட்டத்தில் அடுத்த மாதம் 7 ம் திகதி வரை கிளிநொச்சி நகரப் பாடசாலைகளை மூடி விடுவதென்று தீர்மானிக்கப்பட்டது. சூழ்நிலைகளை அனுசரித்து தொடர்ந்துபாடசாலைகளை மூடி விடவும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

## வெளிநாட்டிலிருந்து
# திரும்பிய 11 பேரின் பொருள்களும் கொள்ளை

யாழ்ப்பாணம், ஞாயிறு

வெளிநாட்டில் வேலைசெய்து விட்டுவந்த 11 பேரின் உடமைகளும், யாழ்ப்பாண வர்த்தகர்களின் பொருட்களும் கொழும்பிலிருந்து லொறியில் வந்தபோது தேவிபுரத்தில் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் சுல்தான்ஸ் போக்குவரத்து நிறுவனம் இச் சம்பவம் தொடர்பாக நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

'கடந்த ஞாயிற்றுக்கிழமை 22ம் திகதி இரவு எமது நிறுவனத்திற்கு சொந்தமான லொறியொன்று கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வரும் வழியில் புதுக்குடியிருப்புக்கு அடுத்துள்ள தேவிபுரத்தில் வைத்து ஆயுதமுனையில் லொறியில் வந்தவர்களையும் சாரதியையும் உதவியாளரையும் பலவந்தமாக கீழே இறக்கிவிட்டு லொறியை இனந்தெரியாதவர்கள் தங்களுடன் எடுத்துச் சென்றார்கள். பின்பு 24ம் திகதி செவ்வாய்க்கிழமை பகல் 10 மணியளவில் புதுக்குடியிருப்பு சந்திக்கு அருகில் லொறியை வெறுமையாக விட்டுச் சென்றுள்ளார்கள். மேற்படி லொறியில் வந்த பொருட்களில் பெரும்பகுதி வெளிநாட்டில் வேலைசெய்துவிட்டு வந்த 11 பேர்களின் உடமைகளும் யாழ்ப்பாண வர்த்தகர்களின் வியாபாரப் பொருள்களுமாகும். கொள்ளை போன பொருட்கள் இதுவரை மீட்கப்படவில்லை.


# மரண அறிவித்தல்

### திருமதி சுந்தரம் சிதம்பரம்

திருமதி சுந்தரம் சிதம்பரம் அவர்கள் 28-6-86 அன்று இறைவனடி சேர்ந்தார். இவர் காலம்சென்ற முன்னாள் கொக்குவில் இந்துக்கல்லூரி ஆசிரியர் திரு. காசிநாதனின் அன்புத்தாயாரும், திருமதி விஜயலஷ்சுமியின் அன்புமாமியாரும், சிவசுந்தரம் (நோர்வே, தேவகி (யாழ்பல்கலைக்கழகம்)ஆகியோரின் அன்புப்பாட்டியுமாவார் ஈமக்கிரிகைகள் இன்று (ஞாயிறு) நண்பகல் 12 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக திருநெல்வேலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தகவல்: திருமதி. வி. காசிநாதன், திருநெல்வேலி.
( C 3175)

### மாணிக்கர் சின்னத்தம்பி (வீரமுத்து)

இணுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட தாவடியைச் சேர்நத ஒய்வுபெற்ற ஆசிரியர் மாணிக்கர் சின்னத்தம்பி (வீரமுத்து) அவர்கள் 28-6-86ல் காலமானார் இவர் ராசம்மாவின் அன்புக்கணவரும், ரஜனி, ரஞ்சினி, ராகினி, சிவசோதி, இன்பலட்சுமி, ரவீந்திரன் சுந்தரராஜா ஆகியோரின் அன்புத் தந்தையும், பூபாலசிங்கம், கனகநாயகம், ரவீந்திரன் ஆகியோரின் மாமனாரும், ஜனார்த்தனன், சுஜந்தன், சுயீபன், சுரேஷ், சிவகாமினி, புரவினா ஆகியோரின் பேரனுமாவார். ஈமக்கிரியை 29-6-86 ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

தகவல்: நாகையா, (ஆகிரியர்) (C-3170)


இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு ஜூன் மாதம் 29-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu P. O Box 49 Telegram, Eelanadu, Telephone 22389, 24126.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org